JL
Y31mN27 GR
N28.2.8
223472

Regd No. M 1930 ஓம்: வந்தேமாதரம். Annual Sub. Rs 2

# கிராமானுகூலன்.

(ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை)

# GRAMANUKULAN.

| புத்தகம் 2 | 1928 வரு நவம்பர்-டிஸம்பர்மீ<br>விபவ வரு கார்த்திகைமீ | ஸஞ்சிகை 8 |
|---|---|---|

சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாடுகளுக்கு வருட சந்தா | தபாற்கூலி உள்பட | ரூபா | 2—0—0 |
| வெளிநாடுகளுக்கு | ஷை | ஷை | ஷை 2—8—0 |
| தனிப்பிரதி | ஷை | ஷை | ஷை 0—3—0 |

விஷய சூசிகை.


| | | |
|---|---|---|
| | பத்திராதிபர் .... | 151 |
| 1 | லாலா லஜபதிராய் .... | 152 |
| 2 | கிராம உத்தியோகஸ்தர்கள் .... | 153 |
| 3 | கிராம சிப்பந்திகள் .... | 154 |
| 4 | கவர்னர் விஜயம் .... | 154 |
| 5 | அய்யம்பேட்டை ஜோஸியர் .... | 154 |
| 6 | எ. டி. வெங்கட்ட நாராயண பிள்ளை .... | 154 |
| 7 | கும்பகோணம் தாலூகா போர்டு எலக்ஷன் .... | 155 |
| 8 | ஜில்லாபோர்டு அங்கத்தினரும், நகரவாசிகளும், (சேங்காலிபுரம் ஸ்ரீமான் V. பஞ்சாபகேசய்யர்) | 156 |
| 9 | கிராமப்புனருத்தாரணம் (P. ராஜகோபாலய்யர்) | 156 |
| 10 | கிராம பஞ்சாயத்துக்கள் .... | 156 |
| 11 | கர்ணம் உயிர்தப்பினார் .... | 157 |
| 12 | தஞ்சை ஜில்லா, கி. உ. சங்கம் ... | 158 |
| 13 | கிராம பிளானும், லோகல் போர்டுகளும் .... | 158 |
| 14 | தர்மபுரி தாலூகா, கர்ணங்கள் சங்கம் .... | 159 |
| 15 | பண்டைத்தமிழரின் மேம்பாடு (ஸ்ரீமான் ஊ. சா. வெங்கடராமய்யர்) .... | 161 |
| 16 | ஸ்தல ஸ்தாபன திருத்தமசோதா .... | 163 |
| 17 | கிராம விவசாயச் சங்கங்கள் ... | 165 |
| 18 | கீடாமங்கலம் சர்க்கிள், ஓட்டர்களுக்கு ... | 167 |
| 19. | அறந்தாங்கிதாலூகா மீமிசல் கி உ சங்கம் ... | |
| 20 | கிராம உத்தியோகஸ்தர்களின் ஸ்பெஷல் டெஸ்டு, பரிக்ஷைகள். | 169 |
| 21 | லோகல் போர்டு தேர்தல்களும், கர்ணங்களும் | 169 |
| 22 | ராணாபிரதாப சிம்மன் or 'ரஜபுத்திர தேசபக்தி' (ஸ்ரீமான் S. மகாலிங்கசர்மா) | 170 |


விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| பக்கம் 1 (2 கலம்) மீ 1-க்கு | ரூ 10 | கலம் ½-க்கு மீ 1-க்கு | ரூ 2-8 |
| ஷை ½ (1 கலம்) ஷை | ரூ 5 | இஞ்சு 1-க்கு ஷை | அணா 8 |

N. ஆபத்ஸகாய ஐயர், பத்திராதிபர்.

கிராமானுகூலன் ஆபீஸ்:-கும்பகோணம்.

# கிராமானுகூலன்.


ஆதரணைக்கர்த்தர்கள்

ஸ்ரீமான் N. வெங்கட்டராம ஐயர் அவர்கள்.

ஸ்ரீமான் K. S. சிவசுப்பிரமணிய ஐயர் அவர்கள், M

போஷகர்

ஸ்ரீமான் T. S. துரைசாமி பிள்ளை அவர்கள்,

கிராம முன்சிப், திருப்பனந்தாள்.



## கிராமானுகூலன்.

சந்தா விபரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| போஷகர்களுக்கு வருஷம் 1-க்கு ரூ. | 50 | 0 | 0 |
| அபிமானிகளுக்கு ,, | ... 15 | 0 | 0 |
| ஜீவிய சந்தா | ... 25 | 0 | 0 |
| வருட சந்தா இந்தியா, பர்மா, சிலோன் | ... | 2 | 0 | 0 |
| அயல்நாடுகளுக்கு (சிங்கப்பூர், பினாங்கு, மோரீஸ், நெட்டால்) | ... | 2 | 8 | 0 |

பத்திரிகாபிமானிகள் போஷகர்களாகவும், அபிமானிகளாகவும், ஜீவிய சந்தாதாரர்களாகவும் சேர்ந்து ஆதரிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.



கும்பகோணம் தென் இந்தியா

கன்பெக்ஷனெரி பாக்டரியில் தயாரிக்கப்படும்

பெப்பர்மெண்டையே உபயோகியுங்கள்!

ஏன்?

ஏன் எனில் இந்திய மூலதனத்தைக்கொண்டு இந்தியர்களால் நடத்தப்படும் தொழிற்சாலை இதுவே வெகு தேர்ந்தியானவை என்று புகழ்பெற்றது!

நயம்! ஒருமுறை தருவித்துப் பாருங்கள்! உண்மை விளங்கும்!

விவர விபரத்திற்கு உடனே எழுதுங்கள்!

SOUTHERN INDIA CONFECTIONERY FACTORY,

KUMBAKONAM.



ரிஜிஸ்டர் நெ. M. 1930] வந்தேமாதரம். [வருஷ சந்தா ரூபா 2—0—0


# கிராமானுகூலன்.


(ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.)


"ஒன்று பட்டாலுண்டு வாழ்வே — நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் — இந்த
ஞானம்வந்தாற்பின் நமக்கேதுவேண்டும்" — பாரதி

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே." — (ஔவை)


| புத்தகம் 2 | விபவவருஷ கார்த்திகைமீ | ஸஞ்சிகை 8 |
|---|---|---|


# லாலா லஜபதி ராய்.

இந்தியாவின் உத்தமபுதல்வர்களில் ஒருவரான லாலா லஜபதி காலமானார் என்ற செய்தி அளவற்ற துக்கத்தைக் கொடுக்கிறது. பாஞ்சாலசிங்கம், அஞ்சாதவீரர், இணையற்றதேசாபிமானி பஞ்சாபின் இந்தியாவின் முடிசூடாமன்னர், அநியாயமாய் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரால் தாக்கப்பட்டு அதே வியாஜமாக காலஞ்சென்றது சகிக்கக் கூடியதல்ல எந்த சுதந்தரமுள்ள தேசத்தில் பிறந்திருந்தபோதிலும் குடியரசுத் தலைவராகயிருந்து ராஜ்யபரிபாலனம் செய்யக் கூடிய சக்தியும், புத்தியும், அறிவும், ஆற்றலும், புகழும் படைத்த உத்தம தேசாபிமான சிங்கத்தை அடிமை இந்தியாவில் ஓர் போலீஸ் உத்யோகஸ்தன் கைகூசாது தாக்கிவிட்டனனே! என்னே ஆச்சர்யம்! வேறு எந்ததேசத்தில் இக் கார்யம் நடைபெறும்! வேறு எந்த நாட்டிலுள்ள உத்யோகஸ்தராயிருந்தாலும் அந்த நாட்டில்கூட லஜபதியைத்தாக்கத் துணியமாட்டார்களென்பது திண்ணம். துரதிஷ்டம் வாய்ந்த இந்தியாவில் பிறந்ததினாலன்றோ! பாலியமுதல் சாகும்பரியந்தம் தன் ஆயுட்காலம்முழுவதும் தேசத்திற்கே உழைத்து தேசத்திற்காகவே போர் முனையில் உயிர் நீத்தார். அவர்காலம், செல்வம் பூராவையும்தேசமுன்னேற்றத்திற்கும், கல்வியபிவிர்த்திக்கும் அர்ப்பணம் செய்துவிட்டார். இந்தியாவுக்கு அவமானத்தை ஒருகணமேனும் பொருக்[illegible] மிஸ்மேயோ எழுதிய குப்பை புத்தகத் "துரதிஷ்ட இந்தியா" வென நாமஞ்[illegible] [illegible] வெளியிட்டுள்ளார்.

கடைசிவரையில் பொதுஜன நம்பிக்கையை ஒரு சமயத்திலும் இழக்காத தேசாபிமானி இவர் ஒருவரேயாகும். இந்த உத்தமரை நமது காருண்ய கவர்ன்மெண்டார் படுத்தியபாடு கொஞ்சமல்ல. அத்தனைக்கும் சிறிதும் கலங்காமல் தேசாபிமானம் பொங்கி வழிந்துகொண்டு தைரியமாய்நின்றார் தனது தள்ளாத பருவத்தில் 63 வது வயதில் போர்முனையின் முன்னிலையில் நின்று தன்மார்பைக்காட்டி வீரசொர்க்கம் புகுந்தார்! கிராமங்களிலுள்ளவர்களெல்லாம், லாலா லஜபதியின்பெயரை தெய்வம்போல் கொண்டாடி வருகின்றனர். ஜெர்மன் மாஜி சக்ரவர்த்தி கெய்ஸரை ஓர் இந்தியர் பேட்டி கண்டசமயத்தில் "லாலா லஜபதிராய்" சௌக்கியமாய் இருக்கின்றாரா என்றுகேட்டாராம், அதேமாதிரி ருஷ்யா குடியரசு பிரசிடெண்டும், சீன குடியரசு பிரசிடெண்டும் கேட்டார்களாம் அமெரிக்காவைப் பற்றி சொல்லவேண்டியதில்லை. அமெரிக்காவிலேயே லாலாஜி வசித்திருப்பதால் அமெரிக்கர்கள் நம்மைவிட அதிகமாக துக்கிப்பார்களென்பதில் சந்தேகமில்லை.

லாலாஜியின் ஸ்தானத்தைவகித்து நடக்கக் கூடியயோக்கியதை வாய்ந்த மற்றோர் தலைவர் கிடைப்பது கஷ்டமே! துரதிஷ்ட இந்தியா நல்ல சமயத்திலேயே தக்க தலைவர்களை இழந்து வருகிறது அவருடையஆத்மா சாந்தி அடைக. அவருடைய அபிலாஷைப்படி இந்தியா சீக்கிரம் சுயராஜ்யமடைக.

# கிராம உத்தியோகஸ்தர்கள்.

கிராம உத்தியோகஸ்தர்களின் முன்னேற்றமானது அவர்களுடைய முயற்சியைபொருத்தேயிருக்கிறது. அதை அவர்கள் எல்லாரும் அறியாமலிருப்பதுவருந்தத்தக்கதேயாகும். இரண்டொருவர் முயற்சிசெய்தால்மட்டும் ஒருகாரியமும்நிறைவேறிவிடுவதில்லை. எல்லோருடைய முயற்சியும் இன்றியமையாததாகும். சங்கங்கள் ஒன்றிருக்கிறதென்றும், அதற்குதாம்போகவேண்டியது தமது கடமையென்றும் உணராத கி. உ. க்கள் எவ்வளவோ பெயரிருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் சங்கமென்றால் சரீரத்துக்கு சமானமென்றும் ஒரு சரீரத்தின் அவயவங்களில் ஒன்று வேலை செய்யாவிட்டாலும், சரீரம் பாதிக்கப்படுமென்றும் எண்ணவேண்டும். சங்கங்களில் எவ்வளவு மெம்பர்களிருக்கிறார்கள். அதில் எவ்வளவு மெம்பர்கள் மீட்டிங்குக்கு விஜயம் செய்கிறார்கள். அதில் உண்மையுடனும், பொருப்புடனும் எவ்வளவு மெம்பர்கள் நடக்கிறார்கள் என்பதைப்பொருத்துத்தான் ஒருசங்கத்திற்கு மதிப்பு கொடுக்கப்படுகிறது. அதற்குத் தக்க பலன்தான் ஏற்படுகிறது. இது அநுபவத்தில்கண்ட உண்மையாகும். ஏற்கனவே 1920 ௵த்தில் நடந்த கி. உ. சங்கங்கள் மேன்மையுற்று விளங்கியதும், அதனால் பலனடைந்ததும், அதிகமெம்பர்கள் விஜயம்செய்து ஊக்கத்துடனும், தைரியமாயும் போராடியதால்தான் என்பதை ஞாபகமூட்டுகிறோம்.

அம்மா திரிமுயற்சி செய்யாவிட்டால் 15 ரூபா சம்பளத்தைக்காணமுடியுமா! இந்த 15 ரூபா சம்பளத்தைக் கண்டமாத்திரத்தில் தங்களுக்கு சுவர்க்கம்கிடைத்துவிட்டதென்று எண்ணிவிட்டனர்போலும், அதையறிந்த கெவர்ன்மெண்டார் அவர்களை சரியாகமட்டந்தட்டிவிட்டனர். 14 ரூ. 13 ரூபாயாகச் செய்துவிட்டனர். வித்தியாசம் கூடாதென்று பட்டபாடும், வியர்த்தமாயிற்று கொடுத்த சம்பளத்தை குறைக்கும் வழக்கம் இந்தகெவர்ன்மெண்டில் வேறு ஒரு டிபார்ட்மெண்டிலும், அநுஷ்டிக்கப்படவில்லை. இவ்வளவு கேவலமாக கி. உ. க்கள் மதிக்கப்படவேண்டிய காரணமென்ன? அதை யோஜித்துப்பார்த்தீர்களா? உணர்ச்சியுள்ளவர்களாயிருந்தால் சும்மா இருக்கமுடியுமா? 1907 ௵ முதல் கி.உ., க்கள் சம்பளவிஷயமாய் ஓயாது பாடுபட்டு 1921௵ பலனையடைந்து நாம் அதை அநுபவிக்கக்கூடாமல் சங்கத்தில் முன்னின்று உழைத்ததற்காகவே வேலையிலிருந்து தள்ளப்பட்டபோதிலும், 30000 கிராம உத்தியோகஸ்தர்கள் உயர்ந்த சம்பளம்பெற்று சந்தோஷமடைவதையே பெரிதென மதித்து சந்தோஷமே அடைந்தோம். சம்பளம் குறைக்கப்பட்ட விஷயம காதில்பட்டமாத்திரத்தில், நாம் அடைந்தவருத்தம் உண்மையில் சம்பளம்வாங்கிக்கொண்டிருக்கும் ஒருகிராம உத்தியோகஸ்தரும், அடைந்திருக்க மாட்டாரென்பது திண்ணம். இம்மட்டோ! மரியாதையாக நடத்தி வந்ததும், காற்றுவாக்கில் பறந்தன. முன்னிருந்ததைவிட அதிககஷ்டங்கள் ஏற்பட்டுவிட்டதாக பல புகார்கள் உண்டாயிற்று. மறுபடியும் சங்கம் ஏற்பட்டால் இக்கஷ்டங்கள் ஒழியுமென்று சிலநண்பர்களுக்கு பட்டது அங்கங்கு சங்கங்கள் ஏற்படலாயின. ஆயினுமென்ன மீட்டிங்குக்கு வருகிறவர்கள் மிகச்சொற்பமாகவே இருந்தார்கள் உற்சாகமென்பதே காணோம். பலர் நம்மிடம் நேரில் இக்குறைகளை தெரிவித்து மறுபடி தாங்கள் பத்திரிகையை துவக்கவேண்டுமென்றும் சங்கமீட்டிங்குகளுக்கு வரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர். பத்திரிக்கைக்கு பொருளுதவி செய்வதாகவும், வாக்களித்தனர். அதன்பேரில் நாம் மறுபடியும், பத்திரிகையை துவக்கினோம். நமது ஐவேஜியில்லாத நிலைமையை முதல் சஞ்சிகையிலேயே நன்றாய் வெளியிட்டோம். பல நண்பர்களின் நன்கொடைகளினாலேயே பத்திரிகை இதுவரையில் நடந்துவருகிறது. பத்திரிகையோ லாபமுள்ள தொழிலல்ல என்பது எல்லோரும் அறிந்ததே! நாமும் அறிந்ததுதான். ஆனாலும், கிராம உத்தியோகஸ்தர்கள் தங்களுக்காக உழைக்கும் பத்திரிகைக்கு கஷ்டம் வாராமல் தாங்கிக்கொள்வார்களென்று நினைத்து ஆரம்பித்துவிட்டோம் சிலர்தாங்கியே வருகிறார்கள். ஒவ்வொரு மாதமும் பணமுடையாலும், சொந்த அச்சாபீஸ் இல்லாததாலும் பத்திரிகைதாமதப்பட்டே இருமாதத்திற் [illegible] முறைவரும்படி நேரிட்டுவருகிறது. ஒவ்[illegible] மாதமும் இப்படி நேருவதால் பத்திரி[illegible] வருடத்தை 12 சஞ்சிகை முடியும்வரையில் நீட்டு



வதென்று நாமும்தீர்மானித்துவிட்டோம். நமது பத்திரிகையை அபிமானித்து உதவியளித்தவர்களுக்கும், சந்தாத்தொகையை முன்னடி அனுப்பிவைத்தவர்களுக்கும், அதிகசந்தாதாரர்களை சேர்த்துக்கொடுத்துவரும் நண்பர்களுக்கும், நமது மனமார்ந்தவந்தனத்தையளிக்கிறோம்.

பலசந்தாதாரர்கள் முதலாவது ஆண்டு, முதல் சஞ்சிகை பெற்றுவருகிறவர்கள் இன்னமும் தங்கள் சந்தாவை அனுப்பாமலிருக்கிறார்கள். முதலாவது ஆண்டு சந்தாவை, கொடுத்த சிலரோ இரண்டாவது ஆண்டுக்கும் சந்தாவை அனுப்பி வருகின்றனர். முதலாவது ஆண்டுசந்தாவையே அனுப்பாதசிலருக்கு, வி பி. அனுப்பிவைத்தோம் அதை கவுரவமாக திருப்பி அனுப்பிவிட்டனர். அவர்களில் சிலர் கிராம உத்தியோகஸ்தர்களாக இருந்ததும் அதுவும் மிகவும் கவுரவம்வாய்ந்தவர்களாயும், பணக்காரர்களாயும், தாலுகா போர்டு மெம்பர்களாகவும், இருந்தவர்கள். திருப்பிவிட்டதைக்காண திடுக்கிட்டுபோனோம் 70 வி.பி. க்கு 60 வி பி. திரும்பி வந்துவிட்டது இதனால் மிகவும் யோஜிக்கவேண்டிய நிலைமையேற்பட்டது. எதற்கும் அஞ்சாதநெஞ்சபடைத்த நாம் பயந்துபோகவில்லை. அதனால் தீவிரமாக பத்திரிகையை சரிவர நடத்திவரவேண்டியதென்றே தீர்மானித்தோம். இந்த 60 பெயர்களுக்கு பதில் பல 60 பெயர்கள் பத்திரிகையை ஆதரிப்பார்களென்ற நிச்சய புத்திகொண்டோம் குடும்பவிஷயமான சிலவுக்கு வேண்டிய வரவளித்து வந்தவேலையை விட்டோம் கும்பகோணத்திற்கே ஆபீசை மாற்றிக்கொண்டு ஜாகையையும், ஏற்படுத்திக்கொண்டோம். இந்தமாத முதல் பத்திரிகை தவறாமல் காலத்தில் வெளிவர ஸ்ரீகலா பிரஸ் என்ற, அச்சாபீசுக்கு மாற்றிக்கொண்டோம். பத்திரிகையை வெளியிடலானோம்.

குடும்பசிலவிற்கு வேண்டியதற்கு நம்மால் தயாரிக்கப்படுகிற அபூர்வமான பாலச்சந்திர பற்பொடி, கொடுத்து விடுமென்று முடிவுசெய்துகொண்டோம். அதை நண்பர்கள் ஆதரிப்பார்களாக. சீக்கிரத்தில் கிராமானுகூலனுக்கு சொந்த அச்சாபீஸ் ஏற்படுத்திவிடவேண்டுமென்றும், மாதம் இருமுறைப் பத்திரிகையாக மாற்றிவிடவேண்டுமென்றும், அபிப்பிராயப் படுகிறோம். இதுவரையிலுள்ள சந்தாதாரர்கள் தங்கள் சந்தாத்தொகையை ஏககாலத்தில் அனுப்பிவைத்தால் சொந்த அச்சாபீஸ் ஏற்படுத்திவிடமுடியும். சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும், தங்கள் சந்தாத்தொகைகளை முதலாவது ஆண்டுமுதல் பெற்றுவருபவர்கள் இரண்டு வருட சந்தாவை சேர்த்தும் 2 வது ஆண்டிலிருந்து பெற்றுவருபவர்கள் ஒருவருட சந்தாவாகிய ரூபாய் இரண்டையும் மறுதபாலில் மணியார்டர் செய்வார்களானால் இனமளித்ததுபோலாகும்.

கத்தரிப்புலம்கர்ணம் ஸ்ரீமான் சாமிநாதபிள்ளை என்பவர் 2 மாதசஞ்சிகை சேர்ந்தவுடன் அணா 6 மணியார்டர்செய்து இனிபத்திரிகை அனுப்ப வேண்டாமென்று எழுதிவிட்டார். அவருடைய பெருந்தன்மையைபாராட்டுகிறோம். இரண்டுவருடமாக பத்திரிகை பெற்றுக்கொண்டுவந்து வி.பி. வந்தவுடன் திருப்பிவிடும் பெருந்தகையாளர்க்கும் இவருக்கும் எவ்வளவு வித்தியாசம். பத்திரிகை வேண்டாத நண்பர்கள் நமக்கு இனி பத்திரிகை அனுப்பவேண்டாமென்று ஒரு கார்டு எழுதி அதுவரையில் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளவற்றிற்குள்ள பணத்தையும், அனுப்பிவிடுவதன்றோ கௌரவமாகும். அவர்களுடைய பெயர்களை பத்திரிகையில் பிரசுரிக்கவேண்டியது அவசியமாகும் இப்பொழுது இடமின்மையால் பிரசுரிக்கக்கூடவில்லை. கிராமானுகூலனை மாதமிருமுறையாக பிரசுரம் செய்யவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறவர்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை லெட்டர்மூலமாய் தெரிவிக்கவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம். பத்திரிகையை அன்புடன் ஆதரித்து வருவீர்களென்று நம்புகிறோம்.

---

## கிராம சிப்பந்திகள்.

கிராம சிப்பந்திகளில், ஏற்கனவே குறைத்த வெட்டி, தலையாரிகளை மறுபடியும் நியமித்துவிடும்படி கெவர்ன்மெண்டார் உத்திரவு செய்துவிட்டதாக தெரியவருகிறது.

இனம் ஜமீன் கிராம உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தை திரும்பவும் பழைய ஸ்திதிக்கு குறைத்துவிட யோஜனை நடந்துவருகிறதாகவும், புரோப்ரைட்டருக்கு உள்ள நியமனபாத்தியதையை எடுத்துவிடப்போவதாகவும் கேள்விப்படுகிறோம்.

---

**தயவுசெய்து, வி.பி. யை திருப்பிவிடாதீர்கள்!**

## கவர்னர் விஜயம்.

மேன்மை பொருந்திய லார்டு கோஷன் அவர்கள் தஞ்சைஜில்லாவிற்கு விஜயஞ்செய்து பலவிடங்களுக்குச் சென்றதில் கும்பகோணத்தில், முனிசிபல் மீட்டிங்ஹாலுக்கும், தாலுகாபோர்டு கட்டிடத்துச்கும் அஸ்திவாரக்கல்நாட்டினார் இரு சபைகளாலும், உபசாரபத்திரங்கள்படித்து அழகான சித்திர வேலைகள்செய்த வெள்ளிடப்பியில் வைத்து கொடுக்கப்பட்டது. இரண்டிலும் கிராமங்களில் முனிசிபல் அதாமவரி சம்மந்தமான பேச்சேயில்லை. அதற்கென தனியே அலங்கார பந்தலமைத்து பகல் 10 மணிக்கு, மின்சார விளக்குகளும் எரிந்துகொண்டிருந்தது. உபசரணை ஏற்பாடுகள் மிகச்சிறப்பாய் நடந்தேறின. ஸ்ரீமான் ராவ் சாகேப் C. R. லெக்ஷ்மிவராக அய்யங்கார் அவர்களும், ஸ்ரீமான் N. திருவெங்கடத்தய்யங்கார் அவர்களும் மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டு செவ்வனே முடித்து வைத்தனர்.

இந்தவிஷயத்தில் ரெவினியூ டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்கள் யாதொரு சிலவும் செய்ததாக தெரியவில்லை. அப்படியிருக்க சில கிராம உத்தியோகஸ்தர்களிடமிருந்து கவர்னர் விஜய சிலவுக்காகவென்று பணம் வசூலிக்கப்பட்டதாக ஓர்புகார் நமதுசெவிகெட்டுகிறது அதுஉண்மையானால் வருந்தத்தக்கதே! இவ்விஷயம்கண்டிப்புள்ள நிர்வாகியான தாசில்தார், ஸ்ரீமான் சுயம்புவய்யர் அவர்கள் கவனத்தைப்பெறுமாக.

## அய்யம்பேட்டை ஜோஸியர்.

அய்யம்பேட்டை மாஜேஜியப்பாச்சாவடி அக்கிராரத்திலிருக்கும், ஸ்ரீமான் கிருஷ்ணஜோஸியர், ஜோஸியத்தில் நிபுணர். பஞ்சாங்கம் கணித்துக்கொண்டிருந்தார். நற்குணம் நற்செய்கைகள் பூண்டவர் ஜனநன்மையான விஷயங்களில் அபிமானமுள்ளவர். ஏழை, எளியவர்களுக்கும் வந்து கேட்பதற்கு முன்னால் வேண்டியதை அன்புடன் பார்த்துச் சொல்லுகிறார் பணம், பிரதானமாக கருதவில்லை. காலத்திற்கேற்ற படாடோபம் விளம்பரம் முதலியன இல்லாததால் ஜோபிக்கவில்லை ஆதரணைகுறைவினால் பஞ்சாங்கம் கணிப்பதையும் நிறுத்திவிட்டார் அய்யம்பேட்டை வாசிகள் கவனிப்பார்களாக.

## A. T. வெங்கட்டநாராயண பிள்ளை.

கும்பகோணம் வாணாதுறை ஸ்ரீமான் A. T. வெங்கட்டநாராயண பிள்ளை அவர்கள் அகாலமரணமடைந்துவிட்டதற்கு நமது அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பரம்பரை பிரபு, சாந்தகுணசீலர், ஏழைகளிடத்து இரக்கமுள்ளவர், கும்பகோணத்தில் அவர் சம்பந்தப்படாத பொதுஸ்தாபனமே கிடையாதெனலாம். எதனிலும் நற்பெயர் வாங்கினார். ஏழை, பணக்காரர் என்றவித்தியாசம் பாராட்டுவதில்லை. அவரை இழந்தது கும்பகோணத்துக்கும், தஞ்சைஜில்லாவுக்கும் மிக்கநஷ்டமே. வரிகொடா இயக்கத்தில் முன்னின்று உழைத்தார். கதரபிவிர்த்தியில் அக்கரைஎடுத்துக்கொண்டார். எந்த பொது விஷயத்துக்கும் தாராளமாய் பொருளுதவிசெய்து ஆதரித்து வந்தார். அவருடைய ஏகபுத்திரராகிய ஸ்ரீமான் A.T.V நாராயணசாமி பிள்ளை பாபநாசம் தாலுகா போர்டு மெம்பராகவும், கும்பகோணம் ஆனரெரி மாஜிஸ்டிரேட்டாகவும் இருக்கிறார். தகப்பனாருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கக்கூடியவர். அவருக்கு ஏற்பட்ட தாங்கமுடியாததுக்கத்தை சகித்துக்கொள்ளக்கடவுள் அருள்புரிவாராக.

## கும்பகோணம் தாலுகா போர்டு எலக்ஷன்.

சோழபுரம் சர்க்கிளுக்கு ஸ்ரீமான் T.K சிவராமய்யர் பி.ஏ. பி.எல்., திருபடணைந்தாள் ஸ்ரீமான்கள் T.R. மாணிக்கம்பிள்ளை பி.ஏ. இஸ்மால்ராவுத்தர், எ. நடேசபடையாச்சி, அருணாசலபடையாச்சி, கே. கோவிந்தசாமி படையாச்சி முதலியவர்கள் அபேட்சகர்களாகநிற்கிறார்கள். ஸ்ரீமான் அய்யர் அவர்கள் ஏற்கனவே தாலுகாபோர்டு மெம்பராகயிருந்திருக்கிறார். நல்ல அனுபவமுள்ளவர் ஸ்ரீமான் பிள்ளை நமது போஷகர், ஸ்ரீமான் டி. எஸ். துரைசாமி பிள்ளை அவர்கள் தமயன் டி. எஸ். ரெத்தினம் பிள்ளை அவர்கள் குமாரர் பெரியமிராசுதார், ஆங்கிலம் அறிந்தவர், பொது விஷயங்களில் உழைக்கவேண்டுமென்ற ஆர்வமுள்ளவர். கிராமாந்திரவாசி 21-12-28ல், சோழபுரம் போர்டு பாடசாலையில் தேர்தல் நடக்கிறது. வோட்டர்கள் தகுந்தவரைத் தெரிந்தெடுப்பார்களாக.

பாலச்சந்திர பற்பொடியை உபயோகியுங்கள்!
சகலவித தந்தரோகங்களையும் நிவர்த்திக்கும்!



## ஜில்லா போர்டு அங்கத்தினரும், நகரவாசிகளும்.

(சேங்காலிபுரம், ஸ்ரீமான் வி. பஞ்சாபகேசய்யர் எழுதுகிறார்.)

முனிஸிபல் எல்லைக்குள் வசிப்பவர் ஜில்லா போர்டு ஓட்டர்களாகவோ, அங்கத்தினராகவோ இருக்கக்கூடாதென்று சட்டநிபுணரால் கவர்ன்மெண்டுக்கு ஆலோசனை சொல்லப்பட்டிருப்பதாக நவம்பர் 8௳ மித்திரன் 6-வது பக்கத்தில் பிரசுரமாயிருப்பதைப்பார்க்க கிராமாந்திரங்களின் க்ஷேமத்தில் அக்கரையுள்ளவர்களுக்குத் திருப்தியைக்கொடுக்கும் இவ்வபிப்பிராயம் கடைசிவரை சித்தியடைய இடங்கொடுக்குமாவென்பதில் இவ்விஷயத்தின் பழைய சரித்திரத்தைக் கவனிக்கும் போது சந்தேகமுண்டாகிறது.

பழையலோகல்போர்டுகளில் முனிசிபல்டவுன்களில்வசிக்குஞ்செல்வாக்குள்ளவர்களே ஆதிக்கம் வகித்ததால் கிராமந்திரங்களின் நன்மைகள் சரிவரக் கவனிக்கப்படவில்லையென்றும், லோகல்போர்டு அங்கத்தினராய் வருபவர்கள் அதனெல்லைக்குள் வசிக்கவேண்டுமென்பதைக் கட்டாயமாய் விதிக்கப்போவதாயும் 1920-ம் வருஷத்தில் லோக்கல்போர்டு சட்டம் திருத்தப்பட்டபோது சொல்லிக்கொள்ளப்பட்டது. ஆனால் அச்சட்டத்தை இயற்றியவர்கள் பட்டணத்தில் வசிப்பவர்கள் ஒதுங்கி நின்று கிராமாந்திரவாசிகளிடம் லோகல் போர்டுகளை ஒப்பிவித்தால் சரிவர நடத்தமாட்டார்களென்றோ, அல்லது வேறுகாரணத்தாலோ இவ்விஷயமாயுள்ள 52-வது செக்ஷனில் தாலுகாபோர்டு அல்லது, யூனியன் போர்டு எல்லையிலோ அல்லது அதிலிருந்து மூன்றுமைலுக்குட்பட்டோ வசிப்பவர்கள் வோட்டர்களாக லாயக்குள்ளவர்கள் என்று விதித்தார்கள். ஜில்லா முனிசிபாலிட்டி சட்டம் 46-விதியை யனுசரித்து இவ்விதி செய்யப்பட்டதாக செலக்ட் கமிட்டியாரின் ரிபோர்டில் சொல்லப்பட்டிருந்தது. ஆனால் ஜில்லா முனிசிபல் சட்டம் 46-வது விதியில் இம்மூன்றுமைல் விதிவிலக்கு இல்லை. முனிசிபல் எல்லையில் வசியாதவர்களுக்கு முனிசிபாலிட்டியில் இடமில்லை. லோகல் போர்டுகளிலோ வென்றால் மூன்றுமைல் இடங்கொடுத்ததிலிருந்து முனிசிபாலிட்டியில் வசிப்பவர்களும், ஒரு லோக்கல் போர்டு எல்லையைத் தாண்டி மற்றொரு லோகல் போர்டு எல்லையிலிருப்பவர்களும் வோட்டராகவும் மெம்பராகவும் வர இடமுண்டாய்விட்டது. பழைய நிலைமைக்குச் சொல்லப்பட்ட சமாதானம் வார்த்தையளவில் நின்று, காரியத்தில் இன்னும் அதிக இடங்கொடுத்தாய்விட்டது.

இப்போதும் முனிசிபல் டவுன்களில் அக்கரையுள்ளவர்கள்தான் லோகல் போர்டுகளில் ஆதிக்கம் வகிக்கிறார்கள். ஒருதாலுக்காவில் வசிப்பவர்கள் மற்றொரு தாலுக்கா போர்டில் மெம்பராயிருக்கிறார் ஒருவரே ஒருதாலுக்காவிலுள்ள முனிசிபாலிட்டி சேர்மனாகவும் மற்றொரு தாலுகாவிலுள்ள தாலுகா போர்டின் தலைவராகவுமிருக்கிறார். இதெல்லாம் இந்த 52-வது செக்ஷனில் விதிவிலக்கால் ஏற்பட்ட பலன்கள் தற்காலத்தியலோகல் போர்டுகளில் அந்த போர்டுக்கும் ஒரு முனிசிபாலிட்டிக்குமுள்ள பாத்தியதைகள் விவாதத்துக்கு வரும்போது முனிசிபாலிட்டியின் பாத்தியதைதான் முன்னிற்குமென்பதை அனுபவஸ்தர்கள் நன்கறிவார்கள். முனிசிபல் எல்லையில்வசியாதவர்கள் அதன் நிர்வாகத்தில் இடங்கொடுக்கப்படாமலிருப்பது எப்படி நியாயமோ அப்படியே லோகல்போர்டு எல்லையில் வசியாதவர்கள் அதன் நிர்வாகத்திலும் சம்பந்தப்படாமலிருப்பது நியாயமேயாகும். அப்போதுதான் லோகல்போர்டுகளால் கிராமாந்திரங்களின் நன்மைகள் சரிவரக்கவனிக்கப்படக்கூடும். சட்டநிபுணரின் அபிப்பிராயத்துக்குக் கவர்ன்மெண்டார் மதிப்புக்கொடுத்தாலும் கொடாவிட்டாலும் அக்கரையுள்ள சட்டசபை மெம்பர்களும் மற்றவர்களும் இச்சந்தர்ப்பத்தை உபயோகித்து வேண்டியதைச்செய்ய முற்படுவார்களானால் தகுந்தபலன் ஏற்படும். அடுத்த வருஷம் சட்டசபை எலக்ஷன் வருவதால் கிராமாந்திர ஜனங்களும் இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

# கிராம புனருத்தாரணம்.

( பாலையூர், சக்திநிலயத்தலைவர், ஸ்ரீமான் P. ராஜகோபாலய்யர் எழுதியது )

அறிவிற்சிறந்த பெரியோர்களில் பலர் கிராமப் புனருத்தாரணத்தைப்பற்றி பிரசங்க மேடைகளில் பேசியும், பத்திரிகைகளில் எழுதியும் வரும் இக்காலத்தில் மிகவும் சாதாரண அறிவுள்ள நான் எழுதப்புகுந்திருக்கவேண்டுவதில்லை. ஆகவே சுமார் 2 வருஷகாலமாக அவ்விஷயத்தில் ஈடுபட்டும் செய்தும் வருவதால் எனது சிறிய அனுபவம் என்போன்று ஈடுபட்டுவரும். ஊழியர்களுக்கு அனுகூலமாக இருக்கலாகாதா என்ற எண்ணம்தான் இதை எழுதத்தூண்டியது. இதில் எழுதியிருப்பவைகளை முடிவான திட்டமாக கொள்ளமுடியாதெனினும் சிறிதாவது. உபயோகப்படும் என்று நினைக்கிறேன் குற்றங்குறைகளை வாசகர்கள் மன்னிப்பார்களாக.

இந்தியாவில் 2313 நகரங்களும் 685,622 கிராமங்களுமிருக்கின்றன இதற்கேற்றவாறு ஜனத்தொகை நகரங்களில் 3‌2418776; கிராமங்களில் 28,35,98975ம் இருக்கின்றன. ஆகவேபெரும்பான்மையோர் கிராமங்களில்தான் வசிக்கின்றனர். ஓர்சிலநகரங்களில் தார்தடவிய ரோடுகளும், மின்சார விளக்கு வண்டிகளும், ஆகாயத்தை அளாவிய கட்டிடங்களும் இருப்பதினால்மாத்திரம் இந்தியா முன்னேறிவருவதாக நினைக்கமுடியாது. கிராமங்களின் நிலைதான் இந்தியாவின் நிலை. அது வேஉயிர், கல்வியைமுன்னிட்டோ, மில்தொழிலை முன்னிட்டோ சிலநகரங்கள்விஸ்தரிக்கப்படலாம் ஆனால் கல்வியும், மில்தொழிலும் சிறிதளவாய் களை சிலருக்கு கொடுக்கும் எல்லாருக்கும் கொடுக்காது எல்லாரும் பல்லக்கில் ஏறிவிட்டால் தூக்குபவர்கள் யார்? தவிர, அவை சோறு போடுமா? பணம் கொடுக்கும் தங்கத்தை, வெள்ளியை, கடுதாசைத்தின்று ஜீவிக்கலாமா? விவசாயம் அல்லவோ வேண்டும் எல்லாரும் ஒருங்குகூடி ஓர் இடத்தில் சேர்ந்து விவசாயம்தான் செய்யமுடியுமா? முடியாது எல்லா தேசங்களும் நல்விவசாயத்தையே நம்பியிருக்கின்றன. இந்த விவசாயம்மாத்திரம் நம் நாட்டில் குறைவாக இருந்திருக்கும்பக்ஷத்தில் வெகுகாலத்துக்கு முந்தியே இந்தியா பாழடைந்திருக்கும். அதிலும் அன்னிய நாட்டார் இதில் அடிவைத்து இவ்வளவு சுரண்டியும் (வருஷம் 1-க்கு 199 கோடியே 20 லக்ஷம்வீதம் சுமார் 300 வருஷமாக) நாசமடையாம லிருப்பதற்கு விவசாயமும் அதன்பலனாக கிராமங்களும்தான காரணம்.

ஆகவே இத்தகைய கிராமங்கள் தற்காலம் என்ன நிலைமையிலிருக்கிறது என்று ஆராய்ந்தால் அந்தோ! பரிதாபம் மிகவும் சீர்கேடான நிலைமை. இதன் காரணங்களை அறிந்து அதற்குத்தக்க பரிகாரம் தேடவேண்டியதே இப்பொழுது நம்முன்னிலையில்நிற்கும்வேலை. இதுவே கிராமப்புனருத்தாரணம். எந்தெந்த துறைகளில் சீர்கேடடைந்திருக்கிறது என்பதைப்பற்றியும் அதன்பரிகாரத்தையும் மறு அத்தியாயத்தில் விவரிக்கிறேன்.

[இன்னும் வரும்]

### கிராம பஞ்சாயத்துகள்.

சர்க்கார் 1928 அக்டோபர் மாதம் 28-ந்தேதியுள்ள உத்திரவில் தஞ்சாவூர், திரிச்சினாப்பள்ளி, திருநெல்வேலி மேல்கோதாவரி, செங்கல்பட்டு, கீழ்கோதாவரி, ராமனாதபுரம், விசாகப்பட்டணம், இந்த ஜில்லாக்களில் இருக்கப்பட்ட கிராமபஞ்சாயத்துக்களை பஞ்சாயத்து ரிஜிஸ்டிரார் ஜெனரலிடமிருந்து அந்தந்த கலெக்டர்களுக்கு மாற்றி இருக்கிறார்கள். தஞ்சாவூர்ஜில்லாவில் மட்டும் 92 பஞ்சாயத்துகள் இருக்கின்றன.

### கர்ணம் உயிர்தப்பினார்.

இம்மாதம் 5ௗ மாலை நாமக்கல் திருச்சங்கோடு ரஸ்தாவில் ஒரு இரட்டைக்கொலை நிகழ்ந்ததாக செய்தி கிடைத்திருக்கிறது. புல்லப்பரெட்டி என்பவரும், மற்றொருவரும் ஒரு மாட்டு வண்டியில் போய்க்கொண்டிருக்கையில் சிலர் கம்பந்தோட்டத்தில்ஒளிந்திருந்து அவ்விருவர்களையும் கொலை செய்து விட்டு இருதலைகளையும் வெட்டிஎடுத்துக் கொண்டு போய்விட்டதாக சொல்லப்படுகிறது அதேவண்டியில் சென்று கொண்டிருந்த கர்ணம் ஒருவர் நல்லவேளையாக உயிர்தப்பினார்.



# தஞ்சை ஜில்லா கி. உ. சங்கம்.

தஞ்சை ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்களின் சங்கத்தின் கூட்டம் ஒன்று 2-9-28மாலையில் விஜயபுரம் உதவி ஆரம்ப கலாசாலையில் கூடிற்று. அக்கூட்டத்திற்கு ஜில்லாவிலுள்ள பலதாலுக்காக்களிலிருந்தும் சுமார் 60 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். ராவ்சாஹிப் ஸ்ரீமான் கே. வி. திருவேங்கட முதலியார் அக்கிராசனம் வகித்தார். அக்கிராசனர் இன்று கிராம உத்தியோகஸ்தர்கள் இங்கு கூடியிருக்கும் விஷயத்தைப்பற்றியும், தஞ்சை ஜில்லாவில் ஒரு ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்களின் சங்கம் ஏற்படுத்தி அதை ரிஜிஸ்டர் செய்துவிடவேண்டியதைப்பற்றியும், அதனால் கி. உ. க்களுக்கு ஏற்படக்கூடியநன்மைகளைப் பற்றியும் சிறிது நேரம் எடுத்துரைத்தார். பிறகு புலிவலம் ஸ்ரீமான் ராகவய்யங்காரும், ஸ்ரீமான் என். ஆபத்ஸஹாயம் அய்யரும் ("கிராமானுகூலன்" பத்திரிகையின் ஆசிரியர்) மற்றும் பல கனவான்களும் பேசினார்கள். பிறகு "தஞ்சை ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்களின் சங்கம்" என்ற பெயருடன் ஒருசங்கத்தை உடனே ஸ்தாபித்து ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்றும் அது சம்பந்தமாக விதிகள் ஏற்படுத்துவதற்கு ஒரு கமிட்டியை நியமிக்கவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. உடனே தாலூக்காகளின் பிரதிநிதிகளாக உள்ள பதினொரு கனவான்கள் அடங்கிய புரொவிஷனல் கமிட்டி நியமிக்கப்பட்டு அதற்கு மன்னார்குடி தாலூக்கா கி. உ. சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் கிருஷ்ணஸாமி அய்யர் கன்வீனராக ஏற்படுத்தப்பட்டார். ஜில்லா சங்கத்துக்கு அவசியமான எல்லா விதிகளையும் சட்டங்களையும் தயார் செய்வதற்காக அந்தக் கமிட்டி நாளது செப்டம்பர் மாதம் 30-தேதி நீடாமங்கலத்தில் கூடுவதென்றும், அந்தக் கமிட்டியாரால் தயாரிக்கப்படும் சட்டதிட்டங்களைக் கிராமஉத்தியோகஸ்தர்களின் மகாநாடு ஒன்று கூட்டி அம்மகாநாட்டின் அங்கீகாரம் பெற்று அமுலுக்குக்கொண்டுவருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

### விஜயபுரத்தில் கூட்டம்.

மேற்படி சங்கத்தினுடைய பொது கூட்டம் 7—10—28 ந்தேதி ஞாயிற்றுகிழமைதினம் விஜயபுரத்தில் எலிமெண்டரி பாடசாலையில் ஸ்ரீமான் எஸ். ராகவய்யங்கார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ்கூடி 30-9-28ல் நீடாமங்கலத்தில் நடந்த மீட்டிங்கில் தயார் செய்யப்பட்டிருந்த ஜில்லா சங்கத்தின் விதிகள் சில மாறுதல்களுடன் அங்கீகரிக்கபட்டன ஷை சங்கத்திற்கு ஸ்ரீமான்கள். P. R. கலியாணசுந்திரம்பிள்ளை அவர்கள் அக்கிராசனராகவும், V. சுப்பராமய்யரவர்கள் உப அக்கிராசனராகவும், ஜி. கிருஷ்ணசாமி அய்யரவர்கள் காரியதரிசியாகவும் டி. வி. ராஜகோபாலய்யரவர்கள் உபகாரியதரிசியாகவும் மீனாக்ஷிசுந்திரம்பிள்ளை 1 அண்ணாசாமி அய்யங்கார் 2 கனகசபை வாண்டயார் 3 சவேதாரண்யபிள்ளை 4 டி. எஸ் சொக்கப்பா முதலியார் 5 இவர்கள் நிர்வாகசபை மெம்பர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் ஜில்லா சங்கம் ரிஜிஸ்டர் செயயவேண்டியதற்கு எல்லா தாலூகா சங்கங்களுக்குமஎழுதி அவைகளுடைய அபிப்பிராயத்தை கொண்டு ரிஜிஸ்டர் செய்யவேணுமாய் தீர்மானிக்கப்பட்டதுடன் சமீபத்தில் தஞ்சைக்கு விஜயம் செய்கிற மேன்மைதங்கிய சென்னை கவர்னர் அவர்களுக்கு ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்களின் சார்பாக ஒரு வரவேற்பு பத்திரம் படித்துக் கொடுக்க வேணுமாயும் அதற்குவேண்டிய நடவடிக்கைகள் நடத்தவேணுமாயும் அக்கிராஸனாதிபதி அவர்களைக்கேட்டுக் கொள்ளுவதாக தீர்மானிக்கப்பட்டது ஜில்லா சங்கத்தின் செலவுக்காக ஒவ்வொரு தாலூகா சங்கம் 10-ரூபாய் வீதம் அனுப்பவேணுமாயும் தீர்மானிக்கப்பட்டது.

---

1928ஹு அக்டோபர்மீ 31ௗ மன்னார்குடியில் ஷை சங்கத்தினுடைய நிர்வாகசபை மீட்டிங் அக்கிராசனாதிபதி மகா-ள-ள-ஸ்ரீ P. R. கல்யாணசுந்திரம் பிள்ளை அவர்கள் அக்கிராசனத்தின் கீழ்கூடி, அடியில்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டது.

## தயவுசெய்து "சந்தா" அனுப்புங்கள்

1. ஜில்லா சங்கத்தை ரிஜிஸ்டர் செய்யவேண்டிய விஷயமாய் சிலரூல்களை திருத்தவேண்டியதற்காக அக்கிராசனாதிபதி மகா-ா-ா-ஸ்ரீ P. R. கல்யாணசுந்திரம் பிள்ளை ஸ்ரீமான் சுப்பராமய்யர் காரியதரிசி ஸ்ரீமான் G. கிருஷ்ணசாமி அய்யர் இவர்களை கமிட்டியாக நியமிக்கப்பட்டது.

2. மேன்மைதங்கிய கவர்னரவர்களுக்கு அட்ரஸ் வாசிக்கவேண்டிய விஷயமாய் தஞ்சாவூர் ஜில்லா மகா-ா-ா-ஸ்ரீ கலெக்டர்துரை அவர்களுக்கு எழுதியதில் சாவகாசம் இல்லையென்று வருத்தத்துடன் எழுதப்பட்ட லெட்டர் படிக்கப்பட்டு ரிகார்டு செய்யப்பட்டது.

3. சங்கங்கள் இல்லாத தாலூகாகளுக்குபோய் சங்கத்தை ஏற்படுத்தவேணுமாய் தீர்மானிக்கப்பட்டது.

4. கிராம உத்தியோகஸ்தர்களுக்கு பரஸ்பர சகாயநிதி ஒன்று ஏற்படுத்தவேணுமாய் தீர்மானிக்கப்பட்டது.

5. சங்கத்திய வரவு,செலவு கணக்குகள் படிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. ராஜவாழ்த்துடனும், தெய்வபிரார்த்தனையுடனும் மீட்டிங இனிது நிறைவேறியது.

---

### கிராமபிளானும், லோகல்போர்டுகளும்.

கிராமபிளான்களையும் செட்டில்மெண்டு ரிஜிஸ்டரையும் இனாமாகலோகல்போர்டுகளுக்கு கொடுக்கவேண்டுமென்று சில லோக்கல் போர்டுகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க கெவர்ன்மெண்டார் லோகல்போர்டுகளால் பராமரிக்கப்படும் ரோட்டுக்களையுடைய கிராமங்களின் பிளான்களையும் செட்டில்மெண்டு ரிஜிஸ்டரையும் 2 காபிகள் வீதம் கொடுக்குப்படியும் சொற்ப ஸ்தலங்களில் மாத்திரம் லோகல்போர்டுக்குசம்மந்தமுள்ள கிராமங்களின் ஸ்கெச்சுக்களை தாலூகாஆபீஸில் லோகல்பண்டு ஓவர்சியரை அனுப்பி காப்பி எடுத்துக்கொள்ளும்படி யனுமதியளிப்பதாயும் G.O.2587 D. 27-10-28ல் உத்திரவுசெய்திருக்கிறார்கள்.

---

## தருமபுரி தாலூகா.

### கர்ணங்கள் சங்கம்.

தருமபுரி தாலூகா கிராம கர்ணங்களுடைய கூட்டம் 7-10-28ல், தருமபுரி அருணாசலய்யர் சத்திரத்தில் பென்ஷன் தாசில்தார் ஸ்ரீமான் சி. என். ராமசேஷய்யர் அவர்கள் தலைமையின்கீழ் கூடிற்று. தருமபுரி தாலூகா கர்ணங்களில் அநேகமாக எல்லோரும் வந்திருந்தனர். கிராம கர்ணங்களுடைய குறைகளை நிவர்த்திக்க வழிதேடும் பொருட்டும், அவர்களுடைய க்ஷேமாபிவிர்த்திக்காக முயற்சி எடுத்துக்கொள்ளும் பொருட்டும், பிரதியாதமும் மீட்டிங்கு கூட்டுவதாக தீர்மானிக்கப்பட்டது. பிறகு, கீழ்கண்ட நிர்வாகசபை அங்கத்தினர்கள், உத்தியோகஸ்தர்களாக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். சங்கவிதிகள் நிறைவேற்றப்பட்டன. பிரசிடெண்டு ஸ்ரீமான் கே. வி. ராஜகோபாலய்யர் கர்ணம் கிருஷ்ணாபுரம், வைஸ்பிரசிடெண்டு ஸ்ரீமான் எம. எஸ். வெங்கட்டராமணய்யர் கர்ணம் மாதேமங்கலம், பொதுகாரியதரிசி ஸ்ரீமான் எஸ். ராமசாமிய்யர் கர்ணம் சோகத்தூர் பொக்கிஷதார் ஸ்ரீமான் V.R. ஸ்ரீகிருஷ்ணய்யர் கர்ணம்கிருபாகஷிபுரம், ஆடிட்டர் ஸ்ரீமான் லக்ஷ்மீநாராயணய்யர் கர்ணம் வெள்ளை கவுண்டன் பாளயம், மற்றும் ஆறு கர்ணங்கள் உதவிகாரியதரிசிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவுற்றது.

**தியாகசமுத்திரம், T. S. ராஜகோபாலய்யர்,**
**களஞ்சேரி, K. P. அய்யாஸாமி அய்யர்,**
ஜவுளி வியாபாரம். 48, பெரியதெரு, கும்பகோணம்.

எங்களிடத்தில் பெங்களூர், தர்மாவரம், காஞ்சீபுரம், ஆரணி, பெனாரஸ், காச்சி முதலிய பலவூர் ஜரிகை சேலை சுத்த பட்டு சேலைகளும், சேலம், காஞ்சீபுரம், ஆரணி, துகிலி, துரையூர், குளித்தலை முதலிய பல ஊர் வெள்ளை ஜவுளிகளும், ஜரிகை துப்பட்டாக்களும், மதுரை சுன்னடி சேலைகளும், துப்பட்டாக்களும் ஏராளமாய் ஸ்டாக் செய்து சாயத்துக்கு காரண்டியுடன் குறைந்த லாபத்துக்கு விற்றுவருகிறோம். தாங்களும் தங்கள் இஷ்டமித்திரர்களுக்கும் சொல்லி நேரில் வந்து பார்த்து வியாபாரத்தை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.



# பண்டைத் தமிழரின் மேம்பாடு.

(ஸ்ரீமான், ஊ. சா. வேங்கடராம ஐயர் எழுதியது.)

(140-வது பக்கம் தொடர்ச்சி)

பிறவற்றிலும் அங்ஙனமே. ஆதலின், செல்வம் படைத்தவர் தம்மை இந்திரனாக எண்ணிச் செருக்குக் கொள்ளாது ஈத்துவக்கும் இன்பத்தில் வாழ்வதே மேலானது' என்ற கொள்கையினையுடையவர்கள். கடையெழு வள்ளல்களின் வரலாறுகள் இவ்வுண்மையைப் பெரிதும் வற்புறுத்துவனவாகும். பெருஞ்சித்திரனார் என்ற புலவர் ஒருவர் தாம் அடைந்த வறுமைத் துன்பத்தைப் போக்கிக்கொள்ளவேண்டிப் பெரிதும் வருந்தி முயன்று பல இடையூறுகளையும் தாண்டிப் பெற்ற பெரும் பொருளைக் கொணர்ந்து மனைவியிடம் கொடுக்கின்றார். அக்கால், அவர் கூறுவன யாவை? "எனது அருமை மனைவியே! இவை குமணன் என்னும் அரசன் கொடுத்த பொருள்கள். இவற்றைக்கொண்டு நாமே சுகமாக வாழ்வோம் என்று எண்ணாதே! இப்பொருளை முன்னம் உனக்கு உபகாரம் செய்தவர்களுக்குக் கொடு. உன்னைக் கேட்டவர்களுக்கும் கொடு. உன்னைக் கேளாமலிருப்பினும் தேவையான அனைவர்க்கும் கொடு. சுற்றத்தார் முதலிய பலர்க்கும் கொடு" என்பனவே அவை. இவ்வளவு மேலான ஆராய்ச்சி நிறைந்த அறிவுடன் விளங்கினார்கள் ஆதலின். அவர்கள் செல்வத்தை நல்ல துறைகளாலே தேடிவந்தார்கள். தவறான வழியிலே சம்பாதிக்கப்படும் பொருள் பச்சை மண்ணாலாகிய குடத்துள் நீரை நிறைத்துவைத்தாற்போன்றதாம் என்பது அவர்களது கருத்தாக இருந்தது. அறிவுடைய பெரியோரிடம் இருக்கும் செல்வம் ஊருணியில் நீர் நிறைந்திருப்பதற்குச் சமானமாகவும், அறிவற்ற கீழ்மக்களிடம் இருக்கும் செல்வம் பலரும் செல்லும் வழியில் விஷத்தன்மையான மரம் பழுத்திருப்பதுபோலவும் என்றுபுகழ்ந்தும், இகழ்ந்தும்கூறப்படுவது வழக்கமாகயிருந்தது. சுருக்கிக் கூறின் 'ஈதற்குச் செய்க பொருள்' என்பதே தமிழர்களின் கொள்கையாகும். அவர்களுடைய செய்கைகளும் அங்ஙனமே இருந்தனவாகப் பல சான்றுகளால் அறியப்படுகிறது.

### கைத்தொழில்.

செல்வத்தை நல்லாற்றிலே தேடவேண்டும் என்பதில் பெரு முயற்சிகொண்டத் தமிழர்கள் அதற்கெனப் பல சிறப்பட்ட கைத்தொழில்களிலும் பழகிவந்தார்கள். "நாடென்ப நாடா வளத்தன" என்பதே தமிழ் மக்களின் கைத்தொழிலைப்பற்றிய பரம மந்திரம். தன்னிடத்து வாழ்கின்ற மக்களுக்குத் தேவையானவற்றைப் பிற நாட்டாரிடமிருந்து எதிர்பாராது அனைத்தையும் தன்னிடத்திலேயே பெற்றுள்ள நாடே நாடாவது. பிற நாட்டாரிடமிருந்து பொருள்களை எதிர்பார்க்கும் நாடு நாடாகமாட்டாது என்பதே அவர்களது உறுதியான கொள்கை. பண்டைக் காலத்திலே சோழர்க்குத் தலைநகராக இருந்த காவிரிப்பூம்பட்டினம் தண்டமிழ் நூல்களில் வருணிக்கப்பட்டுள்ளது. அவ்விடங்களிலே பல சிறப்பட்ட தொழில்களிலும் வல்ல கூட்டத்தினரை சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள பகுதிகள் இக்காலத்தவர்க்குப் பெரு வியப்பைத் தருவனவாகும். ஒரு நாடு சிறப்புற எத்துணைத் தொழிலினர் வேண்டும் என்பதை அவற்றைப் படிப்போர் எளிதில் உணர்ந்துகொள்ளலாகும். உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத உழுதொழிலில் தலை சிறந்து விளங்கியதுடன் மானத்தைக் காக்கும் பொருளாகிய உடைவிஷயத்திலும் பெரிதும் கைதேர்ந்திருந்தார்கள். பருத்தி, பட்டு, நார் முதலியவற்றால் ஆடைகளை அமைத்துக்கொண்டனர் அத்தொழில் வீடுதோறும் பரவியிருந்தது என்றுகூடக் கூறப்படலாம். உலோக வகைகளினாலும் தொழில் இயற்றிவந்தனர்.

சங்கு முதலிய கடல்படு பொருள்களையும் தொழில் துறையிலே பெரிதும் பயன்படுத்திவந்தார்கள். உப்பு, பானவகை முதலிய செய்வதிலும் அன்னார் பெரிதும் பழகியிருந்தனர். ஒவ்வொரு தொழிலிலும் தமிழர்கள் தலை சிறந்து விளங்கினார்கள் என்பது அவற்றைச் சிறப்பித்துக்கூறும் பாக்களில் பயின்றுவரும் தொடர்மொழிகளால் இனிது உணரப்படும். நகர நிர்மாணம், சாலை, ஏரி, குளம் முதலிய இன்றியமையாச் சாதனங்கள் ஆகியவற்றை அமைத்துக்கொள்வதிலும் பெயர்பெற்றிருந்தனர். கரிகால்வளவன் காலத்திலே ஒருவகை மண்ணின் துணைக்கொண்டு கட்டப்பட்ட மகாப் பிரசித்திபெற்ற கல்லணை போன்ற பாசன வசதிகளும், தலைமைப் பட்டணங்களும் அக்காலத்திய கைத்தொழில் வல்லுநர்களாலேயே அமைந்தனவாகும். பல திறப்பட்ட பொறிகள் முதலிய படைக்கலங்கள் அமையப் பெற்றுப் பகைவர் நெருங்கவும் அஞ்சத்தக்க வகையிலே பல கோட்டைகள் அமைந்திருந்தன எனக் கேட்கப்படுவது அக்காலச் சிற்பிகளின் சிறப்பை எங்ஙனம் கூறுதொழியும்? அதிகமாகச் சொல்லுவதில் என். ஒவ்வொரு துறையிலும் கப்பல், மோட்டார், ஆகாய ரதம்போன்ற தொழில்களிலும்—அவர் தலை சிறந்து விளங்கியிருந்தனர் என்பது பல நூல்களால் அறியப்படுகின்றது. கைத்தொழில் இன்றேல் நாடு சிறப்புறாது என்ற தத்துவம் அவர்களால் நன்குணரப் பட்டிருந்தது.

## வாணிகம்.

இவ்வாறு வேண்டும் பொருள்களைத் தானே படைத்துக்கொள்ளும் வன்மையினைப் பெற்றிருந்த தமிழ்மக்கள் அப்பொருள்களைத் தாங்கள் பயன்படுத்திக்கொண்டதுடன் அயல் நாட்டாரையும் பயன்படுத்திவந்தார்கள். கப்பல்களின் வழியாகவும், வண்டிகளின் வழியாகவும் பண்டமாற்றுச் செய்துவந்தார்கள். அங்ஙனம் பண்டமாற்றுச் செய்வதில் கொடுப்பதிலே குறைவில்லாமலும், கொள்வதிலே அதிகப்படாமலும் பெரிதும் கவனத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள். எந்தக் காரணம்பற்றியும் நடுவு நிலைமை தவறலாகாது என்பதே அவர்களது முக்கியமான கருத்துப்போலும். நல்ல பயனைத் தருவதானாலும் நடுவு நிலைமைத் தவறிக் கிடைக்கும் பொருளை அப்பொழுதே விட்டு விலகவேண்டும் என்பர் தண்டமிழ் நீதி வல்லோர். தேவையான-அதிலும் இன்றியமையாத பொருள்களையே கொடுப்பதும், கொள்வதும் செய்துவந்தார்கள். வேண்டாப் பொருள்களைத் தேடிப்பார்த்தாலும் அக்காலத்தில் அவை கிடைப்பதில்லை. பெரியப் பட்டணங்களில் நாளங்காடி, அல்லங்காடி என இரண்டுவகைப்பட்ட கடைவீதிகள் இருந்தன. நாள்-பகல், அல்-இரவு. பகற்காலத்திலே திறந்து வைக்கப்பட்ட கடைவீதி இராக்காலத்திலே மூடப்பட்டிருக்கும்; இராக்காலத்திலே திறக்கப்படும் கடைவீதி பகற்காலத்திலே மூடப்பட்டிருக்கும். பொதுஜனங்களின் சௌகரியத்திற்குமாத்திரமல்லாமல் வேற்று நாட்டிலிருந்து வரும் யாத்ரீகர்கள், வியாபாரிகள் ஆகியவர்களின் சௌகரியத்திற்கென்றே இங்ஙனம் பிரிக்கப்பட்டிருந்தன. "இந்த இடத்திலே இன்ன பொருள் கிடைக்கும்" என்ற விளம்பரங்கள் பல நாட்டு மொழிகளிலும் அழகு பெற வரையப்பட்ட பல நிற வர்ணங்களையுடைய கொடிகள் ஆங்காங்குத் தொங்கிக்கொண்டிருந்தன. ஒவ்வொரு பொருளுக்கும் வியாபார அடையாளம் அமைந்திருக்கும். 'இன்னார் இன்னார் இன்ன இன்ன பொருள்களைத் தாம் வியாபாரம் செய்கின்றது' என்ற ஒரு வரையறை இருந்ததாகவும் அறியப்படுகிறது. கூலவாணிகன், அறுவை வாணிகன் என்ற சிறப்புப் பெயர்களையுடைய புலவர்களும் இருந்திருக்கிறார்கள். கூலம்-தானியங்கள். அறுவை-ஆடை. வேண்டாப் பொருள்களின் குவியலும், போட்டித் தொல்லையும் அக்காலத்திலே இருந்ததாக அறியப்படவில்லை. ஆடம்பரமற்ற உண்மையான வாணிகமே நடைபெற்றமையின் அதனை இக்காலத்துச் சிறப்பாகக் கூறப்பெறும் கூட்டுறவு முறையைப் போன்றதாகவே கூறலாம்.

[தொடரும்]



223472

# ஸ்தல ஸ்தாபன திருத்த மசோதா.

மன்னார்குடி தாலூகா போர்டு வைஸ்-பிரஸிடெண்டு ஸ்ரீமான், க. ஸ்ரீநிவாஸராகவ அய்யங்காரவர்களை பேட்டி கண்டு பேசிய விபரம்.

பத்திராதிபர் :—

ஸ்தல ஸ்தாபனத் திருத்த மசோதாவைப் பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

க. ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார் :—

இப்பொழுது இருக்கும் சட்டத்தையும், வர நினைக்கும் திருத்த மசோதாவையும், (reform) நான் முழுமனதுடன் எதிர்க்கிறேன்: 'a bite and a bit' என்ற வெள்ளையர்களின் அபிப்பிராயத்தைத் தழுவியதேதவிர, இந்திய ஜனங்களின் க்ஷேமத்திற்குற்றதல்ல. எந்த நாகரீக கவர்ண்மெண்டிலும், எங்கள் பண்டைய அரசாங்கத்திலும், ஏற்படாத வரி பளு 'taxation without representation robbery' என்றபடி, எங்களைக் கேழ்க்காமல் தொகை அதிகமாய்க் காட்டாமல் பல்வேறு வகையாய் எங்கள் ரத்தம் உறிஞ்சப்படும் காலத்தில், அவல் கொண்டுவா நான் உமி கொண்டுவருகிறேன் கலந்து ஊதிச் சாப்பிடுவோம் என்றபடி, நாங்களே வரவை ஏற்படுத்தி வசூலித்து (எங்கள் இஷ்டப்படி செலவு செய்வதிலும் கவர்ண்மெண்டு சம்மதிக்கிறார்களா? என்று தெரிந்துகொண்டு) சிலவு செய்துகொள்ள 'தன் கையைக்கொண்டு தன் கண்ணைக் குத்திக்கொள்ள' யுக்தி செய்ததே, reform படி ஏற்பட்ட ஸ்தல ஸ்தாபன சட்டமாகும்.

ப. :—திருத்த மசோதா இதை சீர்திருத்துமா?

க. ஸ்ரீ. :—மசோதாப்படி கிராமப் பஞ்சாயத்துகள் ஏற்பட்டு, தாலூகா போர்டை ஒழித்து ஜில்லா போர்டுக்கு நாமினேஷனையில்லாது, நேர் எலெக்ஷனில் அங்கத்தினர்களைத் தெரிந்தெடுத்து பரிபாலனம் நடத்துவது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அது அஸ்திவாரம் சிறிதும் இல்லாத கட்டிடமாகும். அது இதுசமயம் premature ஆகவும் இருக்கிறது. ஆனால், 'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு எளிது' என்றபடி, ஜனங்களுக்கு சௌகரியம் முன்பின் ஆயினும், அன்னிய அரசாங்கத்திற்கு 'ரிஷி கர்ப்பம் ராத்தங்காது' என்றபடி, உடனே கைமேல் பலன் கொடுத்து, மேலும் வலுக்கொள்ள சுவர்தாங்கிகளாய் இருக்க பூர்ண ஆதாரமாய் இருக்கிறதென்பது யாவரும் சிறிது சிந்தித்தாலே உணரக்கூடியது.

ப. :—அரசாங்கத்திற்கு எப்படி வலுக்கொள்ளக் கூடியதாயிருக்கிறது.

க. ஸ்ரீ :—இந்த அரசாங்கம் நம் க்ஷத்திரிய முறை பற்றியது அல்ல. வியாபாரக் கூட்டத்தாரின் ஆக்ஷி முறையே. லாப நஷ்டக் கணக்கு பார்ப்பதிலேயே கருத்து உள்ளவர்கள். இவர்கள் காங்கிரஸின் வேலையால் நாம் ஒற்றுமை அடைவதைப் பார்த்து நம் தொழில் பிறர் வைக்காதிருக்கப் பல துறையில் பாடுபடுவதுபோல் இவர்கள் கல்கத்தா காங்கிரஸிற்கு அஞ்சி நம்மைப்பிரித்து ஆளுவதுமட்டும் போதாது என்று நமக்குள் ஒற்றுமை ஆகாவண்ணம் ஸதா நாம் அடித்துக்கொள்ளவும், இவர்கள் சளைக்கும்பக்கம் தூக்கிவிட்டு, நம் சண்டையைப் பார்த்து மனதிற்குள் கேலி செய்து, 'திருடன் வைக்கோல் போரைக் கொளுத்திக் திருடுவதுபோலும், 'காலை நக்கித் தலைமுட்டை அடிப்பதுபோலும், செய்யும் சூதே reform படி ஏற்பட்ட லோகல் போர்டு சட்டமும் கிராமப் பஞ்சாயத்துச் சட்டமும்.

ப. :—ஸரியானபடி விளங்கவில்லை.

க. ஸ்ரீ :—கிராம சௌகரியத்திற்காக கிராமத்தார்களே செய்துகொள்வது என்ற நோக்கம்

காட்டியுள்ள சட்டத்தில் அஸ்திவாரம் எங்கே? மேலும் வரி ஏற்படாமல் கிராம அனுகூலம் செய்துகொள்வது எங்கே? என் வீட்டு வேலை என் பணத்தில் நான் செய்துகொள்வதற்கும் சட்டம் வேண்டுமோ? நிலவரியில் இருந்து ஏதாவது வீதம் கொடுப்பதாய் அதில் இருக்கிறதா? குறைந்ததால் மிச்சப்பட்ட கப்பத்துகையில் இருந்து கிராமப் பஞ்சாயித்துகளுக்குப் பணம் வருவதாகச் சட்டத்தில் இருக்கிறதா? மைனாரிடி வகுப்பாருக்கும், தீண்டாதவர்களுக்கும் reserved seat மேற்படி எலெக்ஷன் சட்டத்தில் இருக்கிறதா? மெஜாரிட்டி சேர்ந்தால் அப்பக்கத்திற்கே பூராத் துகையும் கொண்டுபோகாமல் நிரவி அவசியமானதைச் செய்ய அதில் இடம் இருக்கிறதா? சுதந்திரம் உண்டா? லோகல் போர்டுச் சட்டப்படி ஒரு மெம்பரை அதிகாரவர்க்கத்தார் தள்ளமுடியாதிருக்க இதில் கலெக்டரே தள்ளிவிட அதிகாரம் இல்லையா? பட்ட வேட்டை ஆடுபவர்போல் மெம்பர் என்பது பெரும் மதிப்பாய் நினைப்பவர்கள் அதிகாரிகள் சொல்லுவதற்கு தோப்பிக்கரணம் போடவேண்டிய நிலைமையில் அசசட்டம் இல்லையா? தலையும், கண்ணும் இல்லா மனிதனுக்கு அலங்காரம் செய்வதுபோல சுதந்திரமும், பணமும் இல்லாமல் கிராமத்தை சீர்செய்துகொள்ள அதிகாரச்சட்டம் எதற்கு? இந்தச் சட்டத்தை கிராமங்களில் கொண்டுவிட்டதும், கக்ஷிப்பிரதிகக்ஷிகளும் சண்டையும் வலுத்திருப்பது தெரியவில்லையா? ஒருவருக்குக்கூட காணாத சோரை பலர் எடுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டால் பஞ்சநாட்டில் அடிதடிக்குக் கேட்பானேன்! அன்னியர் ஆனந்தத்திற்குத் தடையா?

ப.:—தாலூகா போர்டை எடுத்துவிடுவதைப்பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

க. ஸ்ரீ:—மேற்படி குறைகள் இல்லாமல் கிராமப் பஞ்சாயித்துக் கோர்ட்டு என்று தனியாக வைக்காமல் இத்துடன் இணைக்கப்பட்டுப் பிரதி கிராமங்களிலும் கிராம பஞ்சாயித்து ஏற்பட்டதும் தாலூகா போர்டு இருப்பது பைத்தியக்காரத்தனமே. அப்படியில்லாது பின்னால் அஸ்திவாரம் போடுவதாயும், 'நாளை வாழ்க்கைப்படுகிறேன் கழுத்தே சுகமாயிரு' என்று சொல்லி 'கைப்பழத்தை விட்டுத் தூரட்டுப்பழத்திற்கு அண்ணார்ந்து நிற்க' பெற்றப் பிள்ளைக்கு அன்புகாட்டி மிகப் பிரியமாய் ஸௌகரியம் செய்வதுபோல் பசப்பும் வழியாகும் இத் திருத்தமசோதா.

ப.:—நம்மால் கிராமச் சீர்திருத்தம் செய்ய முடியுமா?

க. ஸ்ரீ:—கிராம நிர்மாணம் என்பதே எங்நாட்டாரும் என் நாட்டில் இருந்து தெரிந்துகொள்ளப்பார்க்கிறார். எங்கள் வம்ச மூதாதையார் கிராம மேற்படுத்துமுன் கோவில் குளங்களையும், மேச்சல் தரைகளையும் ஏற்படுத்தி தேவஸ்தான மான்னியம், தொழிலாளிகள் மான்னியம், கிராம சமுதாய மான்னியம், நாட்டாண்மை எலெக்ஷன், முதலிய பல்வேறு வைத்துப் பிறகே அகலத் தெருவிட்டுக் கொல்லைவால் வீச்சு மரங்கள் தாராளமாக வளர இடம் வைத்துக் கிணறு, குளங்கள் பல இன்னின்ன காரியத்திற்கென்று ஏற்படுத்தி சுகாதார வழியிலும், கக்ஷிப் பிரதிகக்ஷிகள் ஏற்படாவண்ணம் அவ்வவ்வக் கூட்டத்தாருக்குத் தனித்தனி இடம் வைத்து வேதாங்கமாகிய சோதிஷ சாஸ்திரத்தில் சட்டம் இயற்றி, எதற்கும் குந்தகம் விளையாது கிராம நிர்மாணம் செய்தது யுகாந்திரமாய் ஒன்றும் செய்யமுடியாது தினே தினே ஒற்று வாழ்ந்துவந்த எங்களை வரிபளு தாங்கமுடியாது இவ்வதிகாரவர்க்கத்தார் செய்துவிட்டார்கள். இருப்பினும் எங்கள் கட்டு இன்னும் குலையவில்லை. இதைக் குலைக்கப் பலரை கிராம சீர்திருத்தத்திற்கென்று அன்னிய நாட்டில் இருந்துகொண்டுவந்து இந்தியச் சிலசில கிராமங்கள் சுற்றவிட்டு, எங்கள் கட்டை அடியுடன் வேறறுக்க இப்பொழுது இருக்கும் நிலைமையில் இச்சமயம் இத்திருத்தம் இருப்பதாகவே நான் நினைக்கிறேன்.



# கிராம விவசாயச் சங்கங்கள்.

## சில முக்கிய குறிப்புகள்.

(ஸ்ரீமான், எஸ். பிரணதார்த்திஹரன் எழுதுவது.)

விவசாயம், வேளாண்மை, கிருஷி, பயிர்செய்தல் என்பது ஒரு நூலையோ பல நூல்களையோ படிப்பிற்குமாத்திரம் போதிக்கும் சாஸ்திரமல்ல. அதலாபத்தை அடையும் ஒருமார்க்கம் அல்லது விருத்தியாகும். நிலத்தை உழுது பயிரிடுவதாகுமாத்திரம் விவசாயமென்பதல்ல. மனிதர்களுக்கு வேண்டிய உணவு பதார்த்தங்கள், உடைகள் முதலிய யாவும் அடங்கியது. உதாரணமாக நமக்கு நெல், கோதுமை, கரும்பு, பருத்தி, பூ, பழங்கள் முதலியன நிலத்திலிருந்தும் செடிகளைத்தின்று ஜீவித்துப்பால், தயிர், நெய், மாமிசம், கம்பளி, பட்டு முதலியன பிராணிகளினின்றும் கிடைக்கின்றன. ஆகலால் நிலத்தைப்பயிரிடுவதோடு ஆடு, மாடு, பட்டுப்பூச்சி முதலியவைகளைவிருத்தி செய்வதும் விவசாயத்தைச் சேர்ந்ததாகும்.

முன்னொரு காலத்தில் இந்திய விவசாயம் எவ்வழியிலும் மேன்மையாகவிருந்ததென்று அன்னியநாட்டு நிபுணர்கள் எழுதியிருப்பதிலிருந்து தெரிகிறது. டாக்டர் வோல்கர் எனனும் ஆங்கில நிபுணர் சுமார் 40 வருஷங்களுக்குமுன் இந்திய விவசாயநிலைமையைப்பற்றிக் கூறும்பொழுது 'வடிகால் பாசன வசதிகளை ஏற்படுத்துவது, ஆடுமாடுகளை விருத்திசெய்வது' பலவகை கறிகாய் தினுசுகள், தான்யங்கள், பழங்கள் இவைகளை விளைவிப்பது முதலியவற்றில் இந்தியர்கள் கைதேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். இவ்விதமிருக்க விவசாயத் தொழில் கீழ்நிலைமைக்கு வந்த காரணங்களென்ன?

நம ராஜதானியில் தரிசு நிலங்கள்போக பாக்கி சாகுபடி செய்யும் நிலங்களில் மூன்றில் ஒன்றுதான் நஞ்செய்சாகுபடி செய்யப்படுகிறது. பாக்கியில் 100-க்கு 10 தான் கிணறுகளினின்று இறைத்துப்பயிராகிறது மிகுந்ததெல்லாம் காட்டுப்பயிருடையன. நஞ்சைகளுக்கும் வருஷத்தில் சராசரி 6 மாதங்கள்தான் தண்ணீர் கிடைக்கிறது, இதனால் வெகுநிலங்களில் எவ்வளவு லாபமெடுக்கக்கூடுமோ அவ்வளவும் எடுக்கமுடியவில்லை. வேண்டிய அளவு தண்ணீர் கிடைக்கும் சிலவிடங்களில் வடிகால் வசதியில்லாமலும், இவ்வசதியுள்ள இடங்களில் பாசன வசதியில்லாமலுமிருப்பதனால் தாராளமாய் எருக்களைப்போட்டுப் பயிரிடவும் முடியவில்லை புஞ்சைநிலங்களில் மழையுண்டானால்பயிருண்டு. இல்லாவிடில் பஞ்சம தலையெடுக்கிறது. மலைகளோ பெருங்காடுகளோ அதிகமாயுள்ள விடங்களில் அதிக மழை பெய்யும். பெருங்காடுகள் கொஞ்ச காலத்திற்குள் அநேகமாக ஒழிந்துவிட்டன. அத்துடன் மழையும் ஒதுங்கிவிட்டது. புஞ்சை விவசாயம் விருத்தியடைய வழியில்லாமல் தவிக்கிறது. இவைகளுக்கு வேண்டிய கிணறுகளைத் தயார்செய்துகொண்டு விருத்திக்குக் கொண்டுவரவேணடும்.

பயிர்கள் வளரவேண்டிய உணவுப்பொருள்களைப் பூமியிலிருந்தே கிரகிக்கின்றன. நாம் தான்யங்கள், சக்கரை, பருத்திமுதலியவற்றை முறையே உணவிற்கும் ஆடைக்கும் உபயோகிக்கிறோம். ஆடுமாடு முதலிய மிருகங்கள் பயிர்களின் தாள்கள், பொட்டு, பருத்திக்கொட்டை, இலைகள், புல், பூண்டுகளைத் தின்று ஜீவிக்கின்றன. இச்சத்துக்களெலாம பூமியிலுள்ள சத்துக்களேயாகும். இச்சத்துக்களை நாம் திருப்பவும் எருக்கள்மூலமாய்ப் பூமியில் போட்டாலொழிய அது கிரமமாக லாபமுள்ள பயிரைக் கொடுக்கும் சக்தியை இழக்கிறது. இப்பொழுது நாம பூமியிலிருந்து பயிராக எடுக்கும் சத்துக்களில் $\frac{1}{4}$ பாகங்கூடத் திருப்பிக் கொடுக்கவில்லை. சாணியை எரிமுட்டையாக மாற்றி எரிக்கிறோம். மூத்திரத்தை அடியோடு கவனிப்பதில்லை மனிதர்களின் மல மூத்திரம் அநேகமாக நஷ்டமாகிறது. எணணெய் எடுக்ககூடிய கடலை, தேங்காய்ப்பருப்பு, கொட்டைமுத்து, ஆழிவிதை, குசும்பா முதலியவையும், பருத்திக் கொட்டையும் ஏராளமாய்ப்பிரான்சு ஜர்மனி ஹாலெண்டு முதலிய தேசங்களுக்குச் சென்றுவிடுகின்றன. எலும்பு ஏராளமாய் தூள்செய்யப்பட்டு, கப்பலுக்குச் செல்லுகிறது. பிரான்சு முதலியதேசங்களில் பிண்ணாக்கை பிஸ்கோத், வெடி மருந்து, எரு முதலியன செய்வதற்கும் உபயோகிக்கின்றனர். பருத்திக்கொட்டையிலிருந்து எண்ணெயைப் பிரித்துவிட்டுப் பிண்ணாக்கை மாட்டுத்தீவனத்திற்கும், எருவிற்கும் உபயோகிக்கிறார்கள். நம் நாட்டின் கைத்தொழில்களை விருத்தி செய்துகொள்ளாததாலும் விவசாயஅபிவிருத்திக்கேற்ற சாதனங்களும் போதனையு

மில்லாததாலும் பணக் கொடுமையாலும் இவைகளின் ஏற்றுமதியால் நம் நாட்டிற்குண்டாகும் கெடுதிகளைத் தெரிந்து கொள்ளக் குடியானவர்களுக்குச் சக்தியில்லாததாலும் இக்கஷ்டங்கள் உண்டாகின்றன. குடியானவர்களுக்குச் சரியான போதனையோடு விவசாய சாதனங்களையும் ஏற்படுத்திக் கைத்தொழிலை முன்னுக்குக் கொண்டுவர முயற்சித்தால் அன்னிய நாடுகளைப்போல் முன்னேற்ற மடையலாம்.

எண்ணெயில் கார்பன், பிராணவாயுவு ஜலவாயுவு இம்மூன்றுமிருப்பதால் இதை ஏற்றுமதி செய்வதில் குற்றமில்லை. பிண்ணாக்கை மாடுகளுக்கும் நிலங்களுக்கும் கொடுக்க வேண்டும். இப்பொழுதுள்ள குறைகளைத் தீர்த்துக்கொள்ள விவசாயசங்கங்கள் (ஐக்யநாணயச் சங்கங்களல்ல) கிராமந்தோறும் ஏற்படவேண்டும். இவைகளே தற்பொழுதுள்ள பணக்கொடுமையையும் குடியானவர்களின் அறியாத்தன்மையையும் நீக்கும். ஆனால் சர்க்காருடையவும் பெருங் குடித்தனக்காருடையவும் தயவு வேண்டும். துரைத்தனத்தாரவர்கள் ஏழை உழவர்கள் சுலபமாய்க் கொடுக்கும்படி ஒரு ஸ்திரமான நிலவரியை விதித்தால் மென்மேலும் நிலங்களை முக்கியமாய் புஞ்சைகளை விருத்திசெய்ய ஊக்கமும் தைரியமுமேற்படும். தற்கால முறையில் புஞ்சைகளைச் சீர்திருத்தி விருத்திசெய்தால் அடுத்த பைசலில் அதிக தீர்வை விதிக்கப்படுமென்கிற பயமிருக்கிறது. இவ்விராஜதானியில் ஒவ்வொரு உழவனிடமும் சராசரி 3 ஏகர் நிலமிருப்பதாக வைத்துக் கொண்டாலும் அதில் 1 ஏகர் நஞ்சையும், 1/5 ஏகர் தோட்டமும், பாக்கி புஞ்சையுமாகிறது. இதனின்று இப்பொழுதிருக்கும் நிலத்தின் செழுமைக்கு எச்செலவும் போக ரூ 150-க்குமேல் கிடைப்பது கஷ்டம். இதைக்கொண்டு ஒருவன் குடும்ப போஷணை, உடைகள், வைத்தியம், வர்ணாச்ரமங்களுக்கேற்ற தெய்வச்செலவு முதலியன செய்ய வேண்டுமென்றால் முடிவதில்லை. சாவுகார்களிடம் அதிக வட்டிக்குப் பணம் வாங்கவேண்டிவருகிறது. அநேக உழவர்களுக்கு சொந்த நிலமில்லை. கொஞ்சமிருந்தாலும், போதாததற்கு குத்தகைக்கும் பெருங் குடித்தனக்காரர்களிடம் எடுக்கிறார்கள். இக் குத்தகையிலிருந்து லாபமடையமுடிவதில்லை. ஏனெனில் ரூ 50 எடுக்கக்கூடிய நிலத்திற்கு ரூ 75 க்குக்குறையாமல் குத்தகை விதிக்கப்படுகிறது. குத்தகை பாக்கி விழுவதால் சாச்வத அடிமையாக வேண்டி வருகிறது. அடிமையாகாவிடில் கோர்ட்டார் எவ்விதத்திலும் வசூலிக்கத் தயாராயிருக்கிறார்கள். இக்கெதியும் நிவர்த்தியாகவேண்டும். இவ்வித கஷ்டங்களுடன் பிள்ளைகளை பள்ளிக்கனுப்ப வேண்டுமென்றால் இச்செலவிற்கும் எங்கிருந்து பணம் தேடுவான்? இதன் முடிவு கடன்காரனாகவும், படியாமலிருப்பதுமேயாகும்.

ஜர்மனி, இடாலி, பெல்ஜியம், அயர்லாந்து, டென்மார்க்கு முதலிய தேசங்கள் சுமார் 40 வருஷங்களுக்கு முன் இந்தியாவைவிட விவசாயத்தில் அதிக கேவல நிலைமையிலிருந்தன. இத்தேசங்களிலும் பணத்தை அதிக வட்டிக்குக்கொடுத்து அநேக குடும்பங்களை அழிக்கும் சாவுகார் நிறைந்திருந்தனர். உதாரணமாக இதாலியா தேசத்தில் 4 ஏகர்நில ஜாமீன்பேரில் ஒருவன் சுமார் ரூ 50 கடன் வாங்கிவிட்டால் அவன் கடனைத் தீர்க்க முடியாமல் நிலத்தை விட்டுவிட்டு ஓடிவிடலானும் அவன் தரித்திர தசையை ஊகித்துக் கொள்ளுங்கள். இப்படியிருந்த தேசங்கள் விவசாய கூட்டுறவுச் சங்கங்களினால் அதிசீக்கிரத்தில் முன்னேற்றமடைந்தன. அந்நாடுகளில் இச்சங்கங்கள் உண்டான வழிகளில் சிலவற்றை கவனிப்போம்.

ஜர்மனி:—இங்கு ரேய்பீஸன் என்னும் பெரியார் முதல் முதல் விவசாயதாரர்களின் குறையைநீக்க முன்வந்தார். இவர் ஆரம்பத்தில் சில கிராமங்களில் ஜனங்கள் பாங்கிகளையும் அவைகளுக்குமேல் சேவிங்ச் பாங்கையும் ஏற்படுத்தினர். கிராமச் சங்கம் மெம்பர்களுக்கு கிருஷிச் செலவிற்கும், அதன் சம்பந்தமான ஆடு, மாடு, கோழி முதலியன விருத்தி செய்தற்குமே கடன் கொடுத்தது. மெம்பராகச் சேரும்பொழுது அவன் நிலத்தின்பேரிலுள்ள முன் கடனையும் தீர்த்துக்கொடுத்து, பின் அவன் சங்கத்தின் உத்தரவின்றிவெளியே கடன் வாங்க முடியாமலும்செய்தது. கடன் நிலத்தின்பேரிலும், மகசூலின்பேரிலும் சுவல்ப வட்டிக்குக் கொடுக்கப்பட்டது. இச்சங்கங்கள் வெகுசீக்கிரத்தில் எங்கும் பரவி தற்காலமுள்ள உன்னத நிலைமைக்கு வந்தது.

பெல்ஜியம்.—இங்கு சுமார் 85 வருஷங்களுக்கு முன் நிலத்திலிருந்து மிகக்குறைந்த லாபம்தான் கிடைத்தது. ஏராளமான நிலம் தரிசாகவுமிருந்தது. கோதுமை வியாபாரத்தில் அமெரிக்கா தேசத்துடன் போட்டியும் போடவேண்டியிருந்தது. ஏனெனில் தானியம் மட்டமாயிருந்ததால் மிகக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிவந்தது. இதனால் கோதுமையின்கீழுள்ள விஸ்தீரணம் க்ஷீணித்துவிட்டது. போதாததற்கு இறக்குமதியும் செய்யவேண்டிவந்தது. (விவசாய வருமானத்தை அதிகப்படுத்த இரண்டு வழிகளுண்டு. அதாவது உள்ள விஸ்தீரணத்தை அதிகப்படுத்தவேண்டும் அல்லது கொடுத்த நிலத்தில் கூடியவரையில் குறைந்த செலவில்விளைவை அதிகப்படுத்தவேண்டும்.

[தொடரும்.]



# நீடாமங்கலம் சர்க்கிள்.

## ஓட்டர்களுக்கு விடுத்த விக்ஞாபனம்.

ஐயன்மீர்!

மன்னார்குடி தாலூகா, 11 எலக்டெட் ஸர்க்கிளாக பிரிக்கப்பட்டு, தாலூகா போர்டு மெம்பர் எலக்டு செய்யவேண்டியதில் நீடாமங்கலம் ஸர்க்கிளுக்கு 16-11-25ல் என்னை மெம்பராக எலக்டு செய்ததாய் டிக்ளார் செய்யப்பட்டு 25-8-26ல் தாலூகா போர்டு மெம்பர்கள் ஏகோபித்து (தங்கள் ஸர்க்கிள் மெம்பராகிய) என்னை வைஸ்-பிரெஸிடெண்டாக எலெக்டு செய்ததும், அது முதல் 216 நாள்கள் பள்ளிக்கூடம், ரோடு, குளம் கிணறு, கல்வர்டு, ஆஸ்பத்திரி முதலிய விஷயமாய் கிராமங்கள்தோறும் சுற்றிப்பார்த்ததும் 7 மாதங்கள் ஷை விஷயமாய் ஏற்பட்ட கமிட்டிகளில் ஈடுபடவேண்டியிருந்ததும்போக, பாக்கி நாட்களில், ஸைமன் கமிஷன் வரவுக்கு வருந்தி தீர்மானம் செய்தது நிற்க, உபாத்தியாயர்கள் திருப்தியாய் நம் பையன்களுக்கு சொல்லிக் கொடுக்கவேண்டி ஷையார்களின் பர்மனெண்டு சம்பளம் ரூபாய் 15 ஐ ரூபாய் 19 ஆகச்செய்ததும், பள்ளிக்கூடங்களில் சம்பள வசூலை நிறுத்தித் தர்மபள்ளிக்கூடமாக செய்ததும் தீண்டாதவர்களுக்குத் தனிப்பள்ளிக்கூடம் ஏற்படுத்தியதும், காலராவினால் ஏற்படும் சாவைக்குறைக்க பாடுபட்டதும், ஏழைகளான பியூன்களின் சம்பளத்தை உயர்த்தியதும், ரோடு கல்வர்டு, கிணறு குளம், ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம் இன்னும் பல விஷயங்களிலும் மற்றவைகளில் கடுமையான எதிர்ப்புக்கும், முன் அணியில் நின்று, வாதாடி காரிய சித்தியடைந்ததும், தாக்ஷிண்யம், கட்சி பிரதிகட்சி, ஜாதி மதபேதம் முதலிய எதையும், மதிக்காது, சட்டங்களை விளக்கி, வேலை செய்ததற்கும்; தாலூகா போர்டு மெம்பர்கள், ஏகோபித்து தங்கள் ஸர்க்கிள் மெம்பரின் படத்தை பெரியதாய் எழுதி ஆபீஸில் வைக்கத் தீர்மானம் செய்து, தங்களுக்கு மதிப்பு உண்டாக்கி, அவர்கள் நன்றியை காட்டியதும், தாங்கள் நன்குணர்ந்ததே.

### என்காலத்தில் தங்கள் ஸர்க்கிளில் செய்து முடிக்கப்பட்டவை.

தாலூகா போர்டு ஏற்பட்ட 42 வருஷங்களில் நமது ஸர்க்கிளில் வாசம் செய்பவர்கள் மெம்பராக ஆகாமல் இருந்ததையும், பிறகு நாமினேஷனில் ஸ்ரீமான் சே.கோ. கிருஷ்ணசாமி பிள்ளை அவர்கள், மெம்பரான காலத்திலும் நம் ஸர்க்கிளின் வேலை, இதர ஸர்க்கிளுக்கு நடந்ததுபோல் அநேகமாய் கவனிக்கப்படாது, நாம் ஏமாந்து போனது போல் இன்னும் இருக்கக்கூடாது என நினைத்து, நான் இதர மெம்பர்கள் ஆதரவைக் கொண்டு வாதாடியதின் பலனால்,

(a) நீடாமங்கலத்திலிருந்து 5 மைல் சுற்றளவில் (1) காளாச்சேரி, (2) ரிஷியூர் (3) பாப்பணமேடு கடம்பூர் (4) நரஸிங்கமங்கலம் இவைகளில் தர்மப்பள்ளிக்கூடம் திறந்துவைத்ததும்,

(b) ஒளிமதி, வையகளத்தூர், ஒட்டக்குடி, இவ்வூர்களுக்கு கிணறு கட்ட போர்டில் தீர்மானிக்கப்பட்டு காண்டிராக்டு விட்டுவருவதும்,

(c) சீர்கெட்டுக்கிடந்த காளாச்சேரி ரோட்டுக்கு வேலை நடத்தியிருப்பதும் பாக்கி முடிய ஏற்பாடு செய்திருப்பதும்,

(d) நகர், பன்னிமங்கலம், கிராமங்களுக்கு ரோட்டு போடப் போர்டில் 13-6-28ல் தீர்மானம் செய்திருப்பதும், எனக்கு மேல்கண்டபடி ஏற்பட்ட பாக்கி 9 மாதங்களில் செய்திருக்கிறேன்.

### வேலைமுடியாமல் என் பிரயத்தினத்தில் இருப்பவை.

பழைய நீடாமங்கலம், நீடாமங்கலம், இவைகளில் தர்மப்பள்ளிக்கூடம் வைக்கவேண்டிய வேலை செய்துகொண்டு வருகிறேன். நான் மெம்பரான மறு மீட்டிங்கிலேயே, நீடாமங்கலத்தில் போர்டு செக்கண்டரி ஸ்கூல் (எய்டெட் ஸ்கூல் சரியாய் நடக்காததினால்) ஏற்படுத்த நான் தீர்மானம் கொண்டுவந்து, ஆக்ஷேபணையன்னியில் 1[illegible]-8-2 ல் ஏகோபித்து பாஸாகியிருக்கிறது. எய்டெட் ஸ்கூல் மானேஜர்களால், கல்வி இலாகா மூலம் பள்ளிக்கூடம் வைக்க சம்மதம் கிடைக்காமல் காலஹரணமாகி வருகிறது. நான் சம்பளமில்லாமல் ஸ்கூலை நடத்தமுடியுமாவென எய்டெட் ஸ்கூல் மானேஜர்களை நான் கேட்டிருக்கிறேன்

ஷை இடங்களில் ஸ்கூல் வைக்கவும் கிணறுகள் கட்டவும் தீர்மானமும் போர்டில் கொணடுவந்திருக்கிறேன். யூனியன் போர்டுக்கு பணமும் என்போர்டிலிருந்து கொடுக்கப்பட்டது.

வையகளத்தூர் பிராமணரல்லாதார் தெரு நடப்பில் உள்ள வாய்க்காலுக்கு மதகும் (இப்பால் காண்டிராக்டு விட்டிருக்கிறது தவிற) மற்றொரு கிணற்றிற்கும், குளம் வெட்டுவதற்கும் ஏற்பாடு செய்துவந்து போர்டிலும் தீர்மானம் வந்திருக்கிறது.

ஒளிமதியில் என் காலத்தில் 13—6—28ல் பாஸாகியிருக்கிறது கிணறு நிற்க, மற்றொரு கிணற்றிற்கும், ரோட்டை மெயிண்டயின் செய்யவும், ஒரு இலவச போர்டு பாடசாலை வைக்கவும், குளம் வெட்டவும் பாடுபட்டுவந்து தீர்மானம் கொண்டுவந்திருக்கிறேன்.

பன்னிமங்கலத்திற்கு நரசிங்கமங்கலத்தில் ஒரு இலவச போர்டு பாடசாலை என்னால் திறக்கப்பட்டதும் தவிர, ரோடு போட 13-6-28ல் பாஸ் செய்யப்பட்டிருக்கிறது. குளங்களை வெட்ட தீர்மானம் கொண்டுவந்திருக்கிறேன்.

கோவில்வெண்ணியில் 2 கிணறு கட்ட தீர்மானம் கொண்டுவந்திருக்கிறேன். ஆதனூரில் கிணறு வெட்டவும் குளம் வெட்டவும், தீர்மானம் கொண்டுவந்திருக்கிறேன்.

காளாச்சேரிக்கு ரோட்டைச் சீர்செய்துவருவதும் தவிர, ரோடு சீர்திருத்தத்திற்கும், கிணறு 4 கட்டவும், குளம் வெட்டவும் பாடுபட்டுத் தீர்மானமும் கொண்டுவந்திருக்கிறேன்.

பூவனூருக்கு ரோட்டில் கல்வர்டு கட்டவும், தீர்மானம் கொண்டுவந்திருக்கிறேன்.

எனக்குள்ள மேற்கண்டபடி வேலையில்லா நாள்களில் நான் செய்த வேலையையும் காலமில்லாததால் இதரவேலை நடக்காமல் பாக்கியிருப்பதையும் தாங்கள் உணரலாம். என் வேலையெல்லாம் விட்டு பொது வேலையிலேயே என் பூரா காலத்தையும் செலவழித்து வருவதையும் தாங்கள் நன்கு உணர்ந்து இருக்கிறீர்கள்.

### ஏற்பாடு செய்யவேண்டிய வேலை.

நான் ஏறறுக்கொண்ட விஷயங்கள் முடிவு பெற்றதும், எல்லா பள்ளிக்கூடத்துக்கும் சொந்த கட்டிடம்ஏற்படவும், என் சர்க்கிளில் கட்டாய இலவசக் கல்வி ஏற்படுத்தவும், அக்காலம் 30 பெண்களுக்குமேல் சேருமிடத்தில் பெண் பாடசாலை தனியாய் பெண் உபாத்தியாயினியுடன் ஏற்படுத்தி ஆண்பாடசாலைக்கு கட்டிடம் ஏற்படுவது தவிர ஒவ்வொரு கிராமத்திலும் பெண் பாடசாலைக்கு ஒரு கட்டிடமும், தீண்டாதவர்களுக்குத் தனிப்பாடசாலையும், ரோட்டு கல்வர்டுகளும் இன்னும் தாங்கள் அப்பப்பொழுது சொல்லும் இதர வேலைகளையும் செய்யவேண்டியவனாக இருக்கிறேன்.

### நன்றி மறவேல்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல அன்றே மறப்பது நன்று" "என நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் இல்லையே செய்நன்றி கொன்றமகற்கு" என்றபடியும் என் சொந்த வேலைகளையெல்லாம் விட்டு, பொதுஜன சேவையிலேயே ஈடுபட்டு, இதுவரை இருந்த மெம்பர்கள் நம் ஸர்க்கிளுக்கு வேலை செய்தது போலில்லாமல், செய்திருக்கிற வேலையையும், நடக்க வேண்டிய வேலைக்கு ஏற்பாடுகள் செய்து தீர்மானம் வரை கொண்டுவந்து இருப்பதையும் பாக்கி ஏற்பாடாக வேண்டியதையும், உணர்ந்து தாலூகா போர்டு மெம்பர்கள்போல் நன்றியுள்ளவராய் நன்றியைச்செலுத்த தாங்கள் நினைத்தாலும், கக்ஷி பிரதிகக்ஷி, ஜாதி மதம், சிநேக விஸ்வாசம், முதலியதை கவனியாது ஓட் என்பது பொது சொத்து என்று மனசாக்ஷிப்படி உழைப்பாளிக்கு செய்தால் நன்மைஉண்டென்றும், மற்றபடி செய்தால் 'யானை தன் தலையில் மண்ணைப் போட்டுக்கொள்வது போல்', ஓட்டென்னும் பொது சொத்தை ஞாயம் தப்பி உபயோகித்து, தனக்குத்தானே கெடுதல் செய்து கொண்டதாய் முடியுமென்பதையும், தாங்கள் உணர்ந்து நன்றியையும் பாராட்ட நினைத்தால் பொது ஜன சேவையையே; தேசபக்தியையே பெரிதெனக்கருதிய நான் அதற்கு இடம் கொடுக்காமல் நடந்துகொள்ள இடமில்லை.

தங்கள் மனுஷனும் பொதுஜன ஊழியனுமான என்னுடைய மெம்பர் ஸ்தானமும் (ரோடு, படிப்பு, கல்வர்டு, கிணறு குளம், செக்மெஷர்மெண்டு அதிகாரத்தோடு கூடிய) வைஸ்பிரசிடெண்டு உத்தியோகமும் 15-11-1928உடன் முடிவாவதால் நம் சர்க்கிள் மெம்பர் ஷை அதிகார ஸ்தானத்தை வஹிக்க இதர தாலூகா போர்டு மெம்பர்களால் எலெக்ட் செய்யக்கூடியவர்களையும் "சொலல் வல்லன், சோர்வுயிலன், அஞ்சான் இவனை இகல்வெல்லல் யார்க்கும்



# அரந்தாங்கி தாலூகா மீமிசல்.

## கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம்.

(ஸ்ரீமான், S. மகாலிங்கய்யர், உதவி காரியதரிசி எழுதுகிறார்.)

ஷை சங்க மீட்டிங் சென்ற 23-8-28 வியாழக்கிழமை தினம் மீமிசல் மகாராஜா அவர்கள் சத்திரத்தில் கூடியது. 18 மெம்பர்கள் ஆஜராகியிருந்தார்கள். அதில் இத்தாலூகாவின் பரம்பரை பிரபல மிராசுதாரும் நெற்குப்பம் கி. மே. அவர்களுமான மகா-ா-ஸ்ரீ A. கந்தசாமிசேருவைகாரர் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றதின் விபரம் பின்வருமாறு:—

1. இந்த மீட்டிங்குக்கு மேல்கண்ட கனம் சேருவைகாரர் அவர்களை தலைமை வகிக்கும்படி மகா-ா-ா-ஸ்ரீ நெல்வேலி கி. மே. V. கருத்தா பிள்ளை அவர்களால் பிரரேபிக்கப்பட்டு மெம்பர்களால் ஆமோதிக்கப்பட்டது

2. கிராம உத்யோகஸ்தர்களின் பரம்பரை பாத்ய விஷயமாய் சென்ற 3-10-27ல் பரமக்குடி மகாநாட்டிற் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை அனுசரித்து பொன்பேத்தி கர்ணம், S. இராமச்சந்திரய்யர் அவர்களால் பாரம்பரை பாத்தியம் மாகாண முழுவதும் ஒரேவிதமாய் இருக்க வேண்டுமென்றும், சட்டசபை மெம்பர் கனம் முத்தையா முதலியார் அவர்களாற் கொண்டுவரப்பட்டிருக்கும் பரம்பரை பாத்திய மசோதாவை, ஷை முதலியாரவர்கள் தற்காலம் மந்திரிஸ்தானத்தை வகித்துவருவதால் அவர்கட்கு பதிலாய் சட்டசபை மெம்பர்களான கனம் C.V. வெங்கட்டரமணய்யங்கார் அவர்களும், திருவாளர C. மருதவாணம் பிள்ளையவர்களும், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களும் மேற்கண்ட விஷயத்தை முயற்சித்து சட்டமாக்கும்படி மன்றாடி காருண்ய கெவர்மெண்டாரவர்களிடம் உதவி புரியவேணுமாய் கொண்டுவரப்பட்ட பிரரேபனை V. கருத்தா பிள்ளையவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

3. வெட்டிவயல் கர்ணம், சாம்பசிவ முதலியாரவர்களால் கி. உ. க்களுக்கு சம்பளம் மீ 1-க்கு ரூ 30 விதமும், ஏற்கனவே கொடுத்துவந்த ஜமாபந்தி அல்லவுன்சை இரண்டுவருஷகாலமாய் நிறுத்தியிருப்பதை வழக்கம்போல் கொடுக்கவேணுமாயும், கி. உ. க்கள் தாலூகா முதலிய இடங்களுக்கு மேலான உத்திரவின்பேரில் போகவேண்டியதாய் ஏற்படும்காலங்களில் மைலேஜும் தினமொன்றுக்குப்படிச்சிலவு ரூ 1 வீதமும் கொடுக்க

அரிது" என்றபடி நம் சர்க்கிளின் சௌகரியத்துக்காக போர்டிலும், மற்ற இடத்திலும் திரமாய் வாதாடி பணத்தை நம் சர்க்கிளுக்கு அதிகம் கொண்டுவரக்கூடியவர்களை, தாங்கள் தெரிந்தெடுத்தால் நமக்கு சௌகரியம் உண்டென்ற விஷயத்தையும் தோற்ற கக்ஷியாரை மெஜாரிடியில்லாத கக்ஷியாரை தெரிந்தெடுத்தால் அதிகார ஸ்தானம் வஹிக்கவும் சௌகரியம் செய்யவும் முடியாது என்பதும், இதர சர்க்கிள்காரரை தேர்ந்தெடுத்தால் நம் சர்க்கிளிலுள்ளவர் மெம்பர் ஸ்தானத்தை வஹிக்கக்கூடியவர்களை இல்லையென்று, 'நம்மதிப்பை நாமாகக்' குறைத்துக்கொள்வதோடு, நமக்கும் பிரயோஜனமில்லையென்பதையும் தாங்கள் நன்கு தெரிந்துகொண்டிருக்கிறீர்கள்.

ஆதலால் தாங்கள் என்னை ஆதரிப்பீர்களென நம்பி, (ஏற்றுக்கொண்ட பாக்கி வேலைகளையும் மற்றதையும் முடிக்க நான் மெம்பராகவேண்டுமென்று பலர் சொன்ன உத்திரவுக்கு கீழ்ப்படிந்து) காண்டிடேட்டாய் நிற்க சம்மதம் கொடுத்திருக்கிற விஷயத்தை தெரிவித்துக்கொள்வதுடன் தாங்களும் என்னை ஆதரிப்பீர்களென்ற பூர்ண நம்பிக்கையுடன் இருக்கிறேன். இதுவரையில் போர்டில் நான் செய்திருக்கும் வேலைகளை இதின்மூலம் தெரிவித்துக்கொண்டேன். பாக்கி விஷயங்களை பின்னர் அறிவித்துக்கொள்ளுகிறேன். தாங்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கும் சொல்லி என்னை ஆதரிக்கவேணுமாய்க் கோரும்,

க. ஸ்ரீனிவாஸ ராகவன்.
வைஸ்-பிரசிடெண்டு தாலூகா போர்டு,
மன்னார்குடி.

வேணுமாயும் கொண்டு வரப்பட்ட பிரரே பணையை நாட்டாணி வட்டம் கர்ணம் வெங்கட்டரூவ் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

4. இந்த ஜில்லாவில் சத்திரம் டிபார்ட்மெண்டு கிராமாதிகாரிகளும் ரயத்துவாரி கிராமத்தைப்போலவே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ரயத்துவாரி கிராமங்களுக்கு ஏர்பட்ட மேலதிகாரிகளைப்போலவே இந்த டிபார்ட்மெண்டுக்கும் மேலதிகாரிகள் ஏற்பட்டிருக்கிறார்கள். ஷை கி.உ.க்கள் இரண்டு டிபார்ட்மெண்டுகளுக்கு உட்பட்டு இருமடங்கு வேலைகள் செய்ய கடமைப்பட்டிருந்தும் அதற்கு போதுமான சம்பளம் பெறுமல் இருப்பதால் அக்குறையை நிவர்த்திக்க ஷை டிபார்ட்டுமெண்டுத் தலைவருகிய ஜில்லா போர்டு மகா-ள-ள-ஸ்ரீ பிரஸிடெண்டு அவர்களைக் கேட்டுக்கொள்ளவேணுமென்று ஆலத்தூர் வட்டம் ஹெட்மென் சாமிநாதய்யர் அவர்களால் கொண்டுவரப்பட்ட பிரரேபணையை தாழனூர் கர்ணம் சந்தானமய்யங்கார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

5. அடுத்த மீட்டிங் ஆவுடையார் கோயிலில் 22-9-28உயில் கூடவேணுமாயும் பிரதிமாதமும் கடைசிச் சனிக்கிழமையில் குறிப்பிடுமிடங்களில் தவறாது கூடவேணுமாயும் ஏகமனதாய் நிறைவேறியது.

இச்சங்கம் உதவிக் காரியதரிசி மகாலிங்கய்யர் அவர்களால் சங்க முன்னேற்றத்திற்காக சந்தாதுகையை செலுத்தும் விஷயமாயும், ஒற்றுமை விஷயமாயும் நம் ஒற்றுமைக்கு ஹேதுவாகிய கனம் N. ஆபத்ஸஹாயமய்யர் அவர்களால் பிரசுரிக்கப்படும் கிராமானுகூலன் பத்திரிகையை ஒவ்வொரு சகோதர மெம்பர்களும் தருவித்து அதன்படி நடந்து கொள்ளவேணுமாயும் வற்புறுத்திக்கூறியதுடன் மீட்டிங் தலைவருக்கு வந்தனோபசாரம் சொல்லி உத்ஸாஹத்துடன் மீட்டிங் கலைந்தது.

---

## ஆவுடையார்கோவில்மீட்டிங்.

22—9—28.

1. இந்த மீட்டிங்குக்கு நெல்வேலி மகா-ள-ஸ்ரீ வி. கருத்தாபிள்ளை அவர்களை பிரஸிடெண்டாக இருக்க வேணுமாய் மகா-ள-ஸ்ரீ வெள்வரைவட்டம் கர்ணீகர் குப்புசாமி அய்யர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு மெம்பர்களால் ஆமோதிக்கப்பட்டது.

2. நாளது தேதிவரை சங்கத்தின் வரவு, செலவு கணக்கு காரியதரிசி அவர்களால் படிக்கப்பட்டது. மெம்பர்களால் ஏக மனதுடன் ஆமோதிக்கப்பட்டது.

3. மீன்புசல் கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தில் சென்ற 23-8-28 தேதியில் ஸ்ரீமான் கந்தசாமி சேர்வைகாரர் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் மீன்புசலில் மகாராஜா அவர்கள் சத்திரத்தில் கூடிய மீட்டிங்கில் தீர்மானித்தபடி இந்த அரந்தாங்கி தாலூகா வெள்ளார் ரேஞ்சு கிராமஉத்தியோகஸ்தர்களையும் ஷை சங்கத்தில் மெம்பர்களாகசேர்த்து சங்கத்தை விமரிசையாய் நடத்திவரவேணுமாய் பூவலூர் வட்டம் கர்ணீகர்முத்துவீரப்பிள்ளை அவர்களால்கொண்டு வரப்பட்ட பிரரேபணையை மெம்பர்களால் ஏக மனதுடன் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

4. கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரிகளால் அனுப்பப்படும் உத்திரவுகளில் மரியாதையான பதங்களை உபயோகப்படுத்த வேணுமென்று G. O. ஏற்பட்டிருந்தும் அதை கவனிக்காமல் (சிக்ஷிக்கப்படும்) கிராம நவுக்கர்கள் கர்ணன் என்று எழுதிவருவதை நிருத்தி உத்திரவுகளில் மரியாதையானபதங்களையே உபயோகப்படுத்திவர வேணுமென்று தஞ்சாவூர் தாலுக்கா கிராம உத்தியோகஸதர்கள் சங்கம் 5-8-28 ல், நடந்த மீட்டிங்ல் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இச்சங்கமும் பின்பற்றவேணுமாய் பலவாசன் வட்டம் கி.மு இரத்தினசபாபதி சேர்வைக்காரர் அவர்களால் கொண்டுவரப்பட்ட பிரரேபணையை மெம்பர்களால் ஏக மனதுடன் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

5. கிராமங்களில் சப்டிவிஷன் செய்வதற்காக மிராசுதாரர்களிடம் வசூலாகும் துகையில் பாதி கர்ணங்களுக்குக் கொடுக்கப்பட்டுவருகிறது. ஷை சப்டிவிஷன் மகா-ள-ஸ்ரீ ரெ. இ. அவர்களுக்கு அனுப்பி அவர்கள் சோதனை செய்தவுடன் ரெ. இ அவர்கள் கர்ணங்களுக்கு பில் தயார்செய்து கொடுத்து பில்லை கர்ணங்களே நேரில்கொண்டுவந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு போகவேணுமென்று சொல்லுகிறார்கள் அப்படிச்செய்யாமல் ஷை பில்லை கிராம சிப்பந்திகளிடத்தில் கொடுத்தனுப்பினால் பில்லை சாங்ஷன் செய்து ஷை சிப்பந்திகள்வசமேபணத்தை அனுப்பும்படி உத்திரவாக வேணுமாயும் இன்னும் சில கேஸ்களில் பில் ஒருமாதகாலத்திற்கு மேற்பட்டால் போர்டார் அவர்கள் சாங்ஷன் வேணுமென்று சொல்லுகிறார்கள். அப்படிச்செய்வதால் கர்ணீகர்களுக்கு துகைகிடைக்காமலே வருஷக்கணக்கான காலதாமதம் ஏற்படுகிறது. அப்படிக்கில்லாமல் உடனே சாங்ஷன் ஆகவேணுமாய் சாட்டிய குடிவட்டம் கர்ணம் ராஜாராவ் அவர்களால் கொண்டுவரப்பட்டபிரேரேபணையை மெம்பர்களால் ஏக மனதுடன் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

6. இந்தமாகாணத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் கிராம சிப்பந்திகளுக்கு மீ 1-க்கு இலன் 1-க்கு ரூ 7-8-0 சம்பளம் ஏற்பட்டு வாங்கிவருகிறார்கள் இப்போது ஏற்பட்ட காலநிலைமையையும், விலைவாசியையும் உத்தேசித்து சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கவேண்டியது அவசியமென்றும் இவ்விஷயமாய் கனம் காருண்ய கவர்ன்மெண்டாரவர்களை இச்சங்கம் கேட்டுக்கொள்ள வேணுமாய் வெள்வரை வட்டம் கர்ணீகர் குப்புசாமி அய்யர் அவர்களால் கொண்டுவரப்பட்ட பிரேரேபணையை மெம்பர்களால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

7. அடியில்கண்ட இச்சங்கம் மெம்பர்களுக்கு கிராமானுகூலன் பத்திரிகையை இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் ஜாப்தாவில் கண்டவர்கட்கு அனுப்பிவரவேணுமாய் இச்சங்க காரியதரிசி மகாலிங்கய்யர் அவர்களால்கொண்டு வரப்பட்ட பிரரேபணையை ஜாப்தாவில்கண்ட மெம்பர்களால் ஆமோதிக்கப்பட்டு இச்சங்கத்தில் ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது.

மேல்கண்டதீர்மானங்களுக்கு நகல் எடுத்து சம்பந்தபட்ட அதிகாரிகளுக்கு அனுபவேணுமாய் காரியதரிசி அவர்களுக்கு அனுமதிகொடுத்து மெம்பர்களால் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த மீட்டிங் 20-10-28ல், ஆவுடையார் கோவிலில் கூடுவதாய் தீர்மானிக்கப்படது.

கடைசியாக ஆவுடையார் கோவில் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் மகா-ள-ஸ்ரீ மலையப்பய்யர் அவர்களால் பிரஸிடெண்டு அவர்களுக்கு [illegible]பசாரம் சொல்லிக் கூட்டம் கலைந்தது.

---

கிராமானுகூலன் பத்திராதிபர் அவர்களுக்கு.

ஐயா,

அடியில்கண்ட இச்சங்கம் மெம்பர்களுக்கு நம் கிராமானுகூலன் பத்திரிகையை ஒவ்வொருவரும் தவறாது வரவழைக்கவேணுமாய் இச்சங்கம் தீர்மானித்தபடி அனுப்பிவர பிரார்த்திக்கிறேன். பத்திரிகை வந்தவுடன் சந்தாதுகையை அனுப்பிவிடுவார்கள்.

தங்கள்,
S. மகாலிங்கய்யர்,
உதவி காரியதரிசி,

---

### கிராம உத்தியோகஸ்தர்களின் ஸ்பெஷல் டெஸ்டு பரீக்ஷைகள்.

1928வரு டிசம்பர்மீ 19, 20உ களில் தஞ்சாவூர், நாகப்பட்டணம், கும்பகோணம், மாயவரம், மன்னார்குடி, பட்டுக்கோட்டை இந்த செண்டர்களில் நடைபெறுமென்று கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

தஞ்சை ஜில்லா போர்டுக்கு கும்பகோணம் ஸ்ரீமான் M. பொன்னுசாமி முதலியார் திருப்ப[illegible] ஸ்ரீமான் T. S. முருகேசம்பிள்ளை ஆச்[illegible]ம் ஸ்ரீமான் M. அருணாசலபடையாச்சி [illegible]மெம்பர்களாக கெவர்ண்மெண்டாரால் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

### லோகல் போர்டு தேர்தலும், கர்ணங்களும்.

கர்ணங்களும் லோகல் போர்டு தேர்தலுக்கு அபேக்ஷகர்களாக நிற்க இடமளிக்கும்படி லோகல் போர்டு சட்டத்தை திருத்த ஒரு மசோதா கொண்டுவரப்போவதாகவும், கிராமத்தில் வசிக்காதவர்கள் கிராமக் கோர்ட்டு மெம்பராக ஆகமுடியாதென்றுள்ள தடையை நீக்குவதற்காக சென்னைக் கிராமகோர்ட்டு சட்டத்தைத்திருத்த மசோதா கொண்டுவரப்போவதாகவும் ஸ்ரீமான் C. S. ரத்னசபாபதி முதலியார் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்.

# ராணா பிரதாப சிம்மன்.

அல்லது

## "ராஜபுத்திர தேச பக்தி"

(ஸ்ரீமான், S. மகாலிங்க சர்மா சிறைவாசத்தில் எழுதியது.)

223472

(All Rights Reserved.)

(... பக்கம் தொடர்ச்சி)

...வாயமூடி லெகிமிஷங்கள்கழித்து சக்தன் தமயனை நோக்கி ஆம்! நீங்கள் கூறியது உண்மையே யான் தங்கள் நோக்கத்தின்படி திருந்தவில்லைதான்! ஆயினும், ஆண்தன்மையற்ற பேடியென்று என்னைத் தாங்கள் கருதிவிடவேண்டாம். என்றால் எத்தகைய தீங்குகள் நமது நாட்டுக்கு நேரினும், அதற்காக நான் குறைகூறப்படுவதையான் சிறிதும் விரும்பவில்லை. என்னிடம் தாங்கள் அன்புடன் நடந்துகொண்டிருக்கிறீர்கள் என்பதை நான நன்கு அறிந்திருக்கிறேன் என்று கூறி சும்மாயிருந்தான்.

அவனுடைய பதிலில் முழுவதும் திருப்தியடைவது பிரதாபனுக்கு கூடாமற் போயிற்றாயினும், அவனும் வாய்திறந்து மருபடி ஒன்றும்பேசவில்லை. சக்தனுடைய மனதில் பொறாமையும், அவமானமும் அனல்போல் எறிய ஆரம்பித்தன. தமயனும் போன்புலாய்ந்த தமயனாயினும் தன்னை ஓர் மாணாக்கன்போல கருதி நடத்துவது மிகக்கொடுமையானது" என்று அவன்கருதினான்.

குதிரைகள் வேகமாக நடந்து காட்டையடைந்தன மரங்களையும், புதர்களையும் தாண்டி வனத்துக்குள்ளே கொஞ்சதூரம் சென்றனா. அரைமணி நேரம் கழித்து திடீரென்று புதாகளிலிருந்து சலசலவென்று ஒரு சப்தம் புறப்பட்டது. ஏதோ ஒரு கரிய உருவம் அங்குமிங்கும் அசைவதுபோல் காணப்பட்டது. சற்றுநேரத்தில் அப்புதரைவிட்டு அது வெளியேவந்து பயங்கரமாக ஒருதரம் சப்தித்தது. ராஜகுமாரர்கள் இருவரும் சப்தமவந்த திசையை உற்று நோக்கினர். உருவத்தில் பெரிய காட்டுப்பன்றியொன்று அவ்வழியே புறப்பட்டதைக்கண்டனா. குதிரை மீதிருந்தபடியே அம்மிருகத்தை வெருட்டி தொடர்ந்தனர்.

வளைந்து வளைந்து ஓடிக்கடைசியில் வெகுதூரம் வரையில் ராஜகுமாரர்களை இழுத்துச் சென்றது அக்கொடிய மிருகம். கையிலுள்ள கத்திகளையும் ஈட்டியையும் வீசிக்கொண்டே தொடர்ந்த ராஜபுத்திரர்கள் கடைசியில் அம்மிருகத்தைத்தொடர்ந்தகளைப்பினால் சிறிது அயர்ந்தனர். அச்சமயத்தில் பன்றி தப்பியோடிவிட்டது; இருவரும் அதனை வெருட்டியும், வெகு கஷ்டப்பட்டு கடைசியில் தாங்கள் அதைக்கொல்லமுடியாது போனதுபற்றி வருந்தினர். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். துரதிஷ்டவசமாக அவர்களுள் ஓர் சம்பாஷணை கிளம்பலாயிற்று:—

சக்தன்:—அண்ணா! தாங்கள் இன்று நடந்துகொண்ட முறைமை எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை ... சொல்லியிருந்தபடி சற்றுநேரம் அம்மரத்தடியில் மிருகத்தை வளைத்திருந்தால் அதனை எளிதில் ஒழித்திருக்கக் கூடும். தங்களுடைய சக்திசாமர்த்தியத்தில் நம்பிக்கைகொண்டு, ஈட்டியை நீங்கள் கையிலேயே எடுக்க... அதனாலன்றோ வேட்டை தப்பிப்போய்விட்டது.

பிரதாப:—தம்பி, சக்தா! ஏன் பதற்றமடைகின்றனை! வேட்டை தவறிப்போனதற்கு நான் எவ்வளவு காரணமோ நீயும் அவ்வளவு காரணமானவன்தான். நடந்துகொண்டதும் சரியாக இல்லை. என் ஆயுளில் இன்று இந்த ஒருதடவைதான் நான் என் வேட்டையை இழந்தது. அதற்கு உன்னுடைய பலஹீனமே காரணம். இரண்டுமுறை உன்பக்கமாக வரும்படி நான் மிருகத்தை வெருட்டி அடித்தேன்; இரண்டு தடவைகளிலும் உன் கத்திவெட்டை அலக்ஷியம் செய்து, மிருகம் தப்பியோடிற்று. என் கைப்பக்கத்தில் அது திருப்பப்பட்டிருப்பில் ஒரே வீச்சில் அதனை மண்ணில் வீழ்த்தியிருப்பேன். அதில் சிறிதும் சந்தேகமில்லை.

சக்தன்:—ஆம். நீங்கள் கூறுவது வெகு ஆச்சரியமாகவே இருக்கின்றது. ஏதோ தங்களைக்காட்டிலும் சக்திச்சண்டையில் நான்மிகவும் குறைந்தவன் என்று பொருள்படும்படியன்றோ தாங்கள் கூறிவிட்டீர்கள். தங்களால் எனக்கு ஏற்பட்ட அவமானத்தை ... மதிக்கிறேன். என் ஆண்மையை நிலைநாட்ட... பூர்ண சக்தியுண்டென்பதை தாங்கள் அறி... போதும்.

[தொடரும்]



கவனியுங்கள் !!

கவனியுங்கள் !

அநேக வைத்தியர்களும், ஹக்கிம்களும், எங்கள் ஔஷதங்களை வாங்கி சொந்த ஔஷதங்களைப்போல் வேறு நாமங்களைச் சூட்டி விற்பனை செய்துவருகிறார்கள்.

சந்திரப்பிரபா மாத்திரைகள்.

தீவிரமான வெள்ளை, (வெட்டை) மூத்திர நாளங்களில் எரிச்சல், மூலம், நீர்ச்சுருக்கு இவைகட்கு பரம ஔஷதம்! ஸ்திரீ ரத்னங்களுடைய வியாதிகளுக்கு நிகரற்ற ஔஷதம்.

16 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1—0—0 தான்!

கேட்போருக்கு காட்லாக் இனாம்! உடனே எழுதுக!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

நெ. 26, பிராட்வே, மதராஸ்.

போலிச்சரக்குகளை வாங்கி ஏமாறாதீர்கள்!

கவனியுங்கள்!

தென்னிந்திய நெசவுசாலை,

கும்பகோணம்.

பலவிதமான டவல்கள், ஷர்ட்டிங் பீஸ்கள், தோத்தி வகையறாக்கள் இந்த நெசவுசாலையில் தயாராகின்றன. மேற்கண்ட S. R. S. டிரேட் மார்க்குள்ள சரக்குகளையே கவனித்துவாங்குங்கள்! நாணயத்திற்கும், உறுதிக்கும் உத்தரவாதமுள்ளதாயிருக்கும். டிரேட் மார்க்கில்லாத சரக்குகளை வியாபாரிகள் S. R. S. டவல் என்று சொன்னால் நம்பி மோசம் போகாதீர்கள்! மேற்படி நெசவுசாலையிலேயே கதர் வேஷ்டிகளும், கதர் துண்டுகளும், கதர் சட்டை பீஸ் தினுசுகளும் தயாராகின்றன.

TRADE MARK REGISTERED S.R.S. KUMBAKONAM

S. R. சுந்தரமய்யர், புரொப்ரைட்டர்.

"சுதந்தரன்"

பர்மாவில்

தேசத்தொண்டில் முன்னணியில்

நின்றுலவும்,

சிறந்த தேசீய செந்தமிழ் வாரப் பத்திரிகை.

| | |
|---|---|
| வருட சந்தா | 5—0—0 |
| ஆறுமாத சந்தா | 2—8—0 |

ஆசிரியர்:—ஸ்ரீமான் அ. நா. சுந்தர முதலியார்.

இந்திய இரத்தம் ஓடும் ஒவ்வொரு இந்தியரும், இதை ஆதரித்தல் அவசியமாகும்.

மானேஜர்,

"சுதந்தரன்" காரியாலயம்,

39, 37-வது வீதி, இரங்கோன்.

"கம்மபாலன்"

(மூன்றும் வருடம்)

பிரதி தமிழ்மாதக் கடைசியில் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகை.

வருட சந்தா ரூபாய் ஒன்றுதான்.

கிராமவாசிகளுக்கு இன்றியமையாதது!

விளம்பர விகிதத்துக் கெழுதுங்கள்!!

பத்திராதிபர்:—

ஆர். வேங்கடசாமி நாயுடு,

கம்மபாலன் ஆபீஸ், திருத்தங்கல்,

சிவகாசி சமீபம், (S.I.Ry.)

மணம் மிகுந்தவை ! குணம் நிறைந்தவை !

# ஜெயலெக்ஷ்மி அண்டு கோ,

அத்தர் வியாபாரம்,

பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

முக்கிய கவனிப்பு.

இதனால் தெரிவித்துக்கொள்வது யாதெனில்:—எங்களால் தயாரிக்கப்படும் ஸாமான்கள் மற்றவர்களைப்போல் வீணை படோடோபமன்னியில் ராஜாங்க பண்டிதர்களால் கையாளப்பட்டுவந்த முறைகளில் சொல்லியபடிக்குள்ள மூலிகை சரக்குகள் பூராவையும் சேர்த்து செய்பாகம் தவராது உயர்ந்த மாதிரியாக மணம், குணம், நலம், இம்மூன்றும் ஒற்றிருக்கும்படித் தயாரித்து நேயர்களுக்கு நன்மையைச் செய்து அதனால் நாங்கள் தக்க ஸர்டிபிகேட்டுகளும் பெற்றிருக்கிறோம். ஸ்ரீமான்கள் அன்புடன் நமது வாஸனைசாலைக்கு விஜயம் செய்து நேரில் பார்த்துக்கொண்டு தங்கள் சிநேகிதர்களுக்கும் நமது வாஸனைசாலையைப் பற்றி சிபார்சு செய்து நல்லாதரவு அளிக்கும்படி வேண்டுகிறோம்.

உயர்தர மாதப் பத்திரிகை !] உ [இரண்டாவது வருடம் !!

3000 சந்தாதாரர்கள்.

# கிராமானுகூலன்.

கிராம உத்தியோகஸ்தர்களுக்காக உண்மையாயும், தைரியத்துடனும் விசேஷ தியாகம்செய்து உழைத்துவருகிற

## ஸ்ரீமான் N. ஆபத்ஸகாய ஐயர், பத்திராதிபர்.

மிராசுதார்கள், விவசாயிகள், கிராம உத்தியோகஸ்தர்கள், ஆரம்ப ஆசிரியர்கள், பிராஞ்சு போஸ்டு மாஸ்டர்கள், ஐக்கிய நாணயச்சங்கங்கள், கிராம சுகாதாரம், லோகல் போர்டுகள், கிராமபுனருத்தாரணம் முதலிய விஷயங்களைப்பற்றி அநேக மேதாவிகளால் எழுதப்படும் அரிய விஷயங்களுடனும், தேசபக்தி புகட்டும் சிறந்த நாவல்களுடனும் வெளிவரும் ஓர் உயர்தர மாதப்பத்திரிகை ஆங்கிலமாதச்சஞ்சிகைகளுக்கு சமானமாய் கிரௌன் 1-க்கு 4-அளவில் மிக உயர்தரமாய் நடத்தப்படுகின்றது இதுபோன்ற தமிழ்மாதச் சஞ்சிகை வேறு கிடையாது. தமிழ்நாடெங்கும் புகழ்வாய்ந்த பத்திரிகை இதுவே.

கிராம உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் சந்தாதாரராகத் தவறமாட்டார்கள் என்று நம்பப்படுகிறது தங்கள் நேசிகர்களுக்கும் சிபார்சு செய்து சந்தாதாரராகும்படி செய்யுங்கள்.

விளம்பரம் செய்வோர்களுக்கு ஏற்ற பத்திரிகை.

வருட சந்தா ரூ. 2—0—0 வெளிநாடுகளுக்கு ரூ. 2—8—0

மானேஜர் :-"கிராமானுகூலன்,"

கும்பகோணம்.


Printed at the Sri Kala Press and Published by N. Apathsagaya Aiyar at Kumbakonam